விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 15 சனிக்கிழமை (27.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 070

## விரைவில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைந்த கட்டமைப்பு

### தமிழ் கட்சிகள், சிவில் அமைப்புகள், மதத் தலைவர்களுடனான சந்திப்பில் வலியுறுத்து



(வவுனியா)
தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் செயற்பட வேண்டு மென நேற்றைய கலந்துரை யாடலில் வலியுறுத்தப்பட்டுள்ள தாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள் ளார்.

விரைவில் தமிழ்த் தேசி யக் கட்சிகளின் ஒன் றிணைந்த 19

## கொரோனா 5 பேர் பலி

+497 தொற்றாளர்கள்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் தெரி வித்தார். 19

## இலங்கை எதிர்த்தாலும்

# பரிந்துரைகளை அமுலாக்குவோம்

### ஐ.நா மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா ஆல் நசிஃப்



(ஜெனிவா)
இலங்கை அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்தாலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை அமுல் படுத்துவோம் என ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளர் நடா அல் நசிஃப் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

நாட்டில் முதலாவதாக

## தாதியை பலியெடுத்த கொரோனா

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற் றால் இலங்கையில் தாதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பியந்தி ரம்யா குமாரி என்றதாதியே 19

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

நேற்றுக் காலை 19

## இலங்கையின் உள்விவகாரத்தில் ஐ.நா தலையீடு செய்கின்றது

### ஜெனிவாவில் சீனா தெரிவிப்பு



(ஜெனிவா)
ஐ.நா.மனித உரிமைகள் சபையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கைக்கு ஆதரவளிக்க சீனா முடிவு செய்துள்ளது.

ஜெனிவாவிற்கான சீனத் தூதர சென் சூ ஐ.நா மனித உரிமைகள் சபையில் 19

## இலங்கைத் தமிழர் விடயத்தில் முன்னர் போல் சர்வதேசம் தோல்வியடையக் கூடாது

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(ஜெனிவா)
இலங்கைத் தமிழர் விடயத் தில் சர்வதேசம், முன்னர்தோல்வி அடைந்ததைப்போல மீண்டும் தோல்வியடைந்து விடக்கூடாது என்று சர்வதேச மனித உரிமை கள் கண்காணிப்பகம் வலி யுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது மாநாட்டில் தமது நிலைப்பாட்டை 19

யாழ்.சிறைச்சாலையில் 6 பேர் உட்பட

## வடக்கில் 7 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.சிறைச்சாலையில் 6 பேர் உட்பட வடமாகா ணத்தில் 7 பேருக்கு 19

## இலங்கை விவகாரம் இந்தியா நடுநிலை

ஆதரவாக 21 நாடுகள்
எதிராக 15 நாடுகள்

03ஆம் பக்கம் பார்க்க

விபத்துக்குள்ளான

## முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
வைத்தியசாலைக் குச் சென்று வீடு 19

இந்திய அரசின் ஆதரவுடன்

## வடக்கு, கிழக்கு, மலையகத்தை ஒன்றிணைத்து புதிய கூட்டணி

### தலைவராக விக்னேஸ்வரன்?

(யாழ்ப்பாணம்)
வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களை ஒன்றிணைக்க தமிழ்த் 19

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை (27) காலை-09 மணி முதல் அல்வாய் இளைஞர் விளையாட்டுக் கழக மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. (ம-03.18)


## கண்ணீர் அஞ்சலி



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவரும்
அமரர் சின்னத்துரை சிவபாக்கியத்தின்
மூத்த மகனுமாகிய
அமரர்
சின்னத்துரை கணேசபிள்ளை
அவர்கள் கடந்த 21.01.2021 (வியாழக்கிழமை) இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கலாவல்லி சனசமூக நிலையத்தினதும் முன்பள்ளியினதும்
நிர்வாகத்தினர் மற்றும் உறுப்பினர்கள்
தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறை.
(5942)



NVQ DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.P25/0056
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை (C-1538)
ICT - NVQ LEVEL- 5
Diploma in Information Technology (Full Time - 1 Year)
NVQ 5 & 6 குறைந்த கற்கைநெறி கட்டணத்தில் ICT துறையில் குறுகிய காலத்தில் அரச பல்கலைக்கழகபட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.
பதிவுகளை மார்ச் 5ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் வடமாகாணத்தில் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 1/3/2021 (Mon) 9 am
Call now 0777173517
ICT - NVQ LEVEL - 4 (Full Time - 6 Months) | CAA - NVQ LEVEL - 3 (Full Time - 3 Months, Part Time - 6 Months)
DMI COMPUTER EDUCATION
No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை) 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655
0777240707


## ஜனாஸா நல்லடக்க விவகாரம்

# வர்த்தமானி அறிவிப்பை தாமதமின்றி நடைமுறைப்படுத்துக

## அமெரிக்கத் தூதுவர் அலெய்னா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பாக வெளியான வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதை அனுமதிக்கும் வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையை அமெரிக்கத் தூதுவர் வரவேற்றுள்ளதோடு, நீண்டகால தாமதத்தின் பின்னரான தீர்மானம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு மேலும் துன்பம் கொடுப்பதைத் தவிர்த்து, அடக்கம் செய்யும் நடவடிக்கையைக் காலதாமதமின்றி செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-03)

# சர்வதேசத்தின் ஆதங்கத்தை குறைக்க அரசு ஓடித்திரிகிறது

## எம். ஏ. சுமந்திரன் தெரிவிப்பு



(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி நேரடியாக சந்தித்து பேச இருப்பதாக கூறிசில நாடுகளின் ஆதங்கத்தை குறைப்பதற்காக கடைசி நேரத்தில் காலம் கடந்த ஞானமாக இப்பொழுது இலங்கை அரசாங்கம் ஓடி திரிகிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

ஜெனிவா அமர்வில். இலங்கை தொடர்பாக பலநாடு கள் நடுநிலைமையை பேணும் என்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகின்றது. இந்த தீர்மானத்தை நிறை வேற்றுவதற்காக. இணை அனுசரணை வழங்கும் நாடுகள் பெரும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதை நீர்த்துப்போக செய்வதற்காகவே இலங்கை அரசு கட்டாய ஜனாசா எரிப்பு என்ற விடயத்தை நீக்கியிருக்கிறது. முஸ்லிம் நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கலாம் என்ற எண்ணத்தில் இதனை செய்திருக்கிறார்கள். எனினும் இஸ்லாமிய நாடுகள் தங்களது நிலைப்பாட்டை மாற்றமாட்டார்கள் என்று நம்புகிறோம். அதே போல சில நாடுகளின் ஆதரவை பெறுவதற்காக காணாமல் போனவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படும் என காலம் கடந்து ஞானம் வந்ததுபோல இலங்கை அரசாங்கம் ஓடித்திரி கிறது. என்றார். (ம-03,250,299)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
கெங்காதரன் தஜீவன்
B.Sc (Hons) Special in Chemistry
2nd Upper

செல்வி.
பானுஜா ஜெயசீலன்
BFA (Hons) in Dance
2nd Upper

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது சகோதரன் மற்றும் மைத்துனி ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.
(5929)
வாழ்த்துவோர் : சதீஸ்கரன் நிரஞ்சினி (அக்கா)
கோண்டாவில்


## முன்னாள் பொலிஸ்மா அதிபர்

# அநுர சேனநாயக்க நேற்று காலமானார்

(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க நேற்று காலமானார். புற்றுநோய் காரணமாக நீண்ட காலமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் நேற்று காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றவியல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக 2011ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டார்.

வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் இவர், கடந்த 2016ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


விற்பனையாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் எமது புடவை நிறுவனத்திற்கு O/L, A/L படித்த வியாபார அனுபவம் உள்ள ஊழியர்கள் தேவை.
நேரில் வரவும். (5943)
சென்னை பெசன் வேல்ட்
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

மணமகன் தேவை
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு (5936)
070 640 5951
e-mail : engchelvam@gmail.com

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
TVS. Wego மோட்டார் சைக்கிள்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு.
(BDW / BCU) (5938)
077 898 9691
யாழ்ப்பாணம்

# சர்வதேச நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி

# மக்கள் போராட்டத்திற்கு அழைப்பு

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(முறிகண்டி)

**சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி வடக்கில் பாரிய மக்கள் போராட்டத்திற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அழைப்பு விடுத்தனர்.**

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது, இவ்வாறு அழைப்பு விடுத்தனர்.

"இலங்கை அரசாங்கத்தால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புக் குற்றங்கள், மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தை முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கு பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மொண்டினீக்ரோ, மாசிடோனியா, மலாவி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இணையனுசரணை நாடுகள் பரிந்துரைக்க வேண்டும்.

அத்துடன், கடந்தகால சம்பவங்களையும், நிகழ்காலத்தில் நடந்துகொண்டிருக்கும் நிலைமைகளையும் ஆராய்ந்தால் ஓர் உள்ளூர் பொறிமுறை மூலமாகவோ அல்லது கலப்புப் பொறிமுறை மூலமாகவோ இலங்கையில் பொறுப் புணர்வை உண்மையாகக் கையாள எவ்வித வாய்ப்பும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்ல அனைவரும் அணிதிரள்வோம்.

நடைபெறவுள்ள மாபெரும் போராட்டத்திற்கு மத குருக்கள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், சமூக அமைப்புக்கள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து உறவுகளையும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு வேண்டி நிக்கின்றோம்.

அதற்கு அமைவரக நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை எட்டு மணிக்கு குறித்த போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பமாகி பழைய வைத்தியசாலையைச் சென்றடையும்.

எனவே, தொடர்ச்சியான அறவழிப் போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலமே எமக்கான நீதியைப் பெறமுடியும்" என அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-100)

---

## வெளிமாவட்ட பேருந்துகள் வைத்தியசாலை வீதியால் பயணிக்க முற்றாகத் தடை - மாநகர முதல்வர்

(நல்லூர்)

யாழ். நகர பகுதியில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் நெடுந்தூர போக்குவரத்தில் இறுக்கமான நடைமுறை பின்பற்றப்படும் என யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து செல்லும் பேருந்துகள் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியால் உளநுழைவது மற்றும் வெளிச் செல்வது மார்ச் மாதம் முதலாம் திகதி முதல்-முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதுடன் நடைமுறைகளை மீறுவோர் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்திற்கு வருகை தந்து தமது பயணங்களை மேற்கொள்ளுமாறும் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (5-4-33)

---

## ஐ.நா. பேரவையின் பிரேரணை தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்னின்று நடத்தும் நாடுகளின் பிரேரணைகளுக்கான பரிந்துரைகளை முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாளை மறுதினம் திங்கட் கிழமை அவற்றை முன்வைக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக, ஜெனிவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அலுவலகம் மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்னின்று நடத்தும் நாடுகளான பிரித்தானியா, ஜேர்மன், கனடா, மொண்டிநீக்ரோ, வட மெசிடோனியா மற்றும் மலாவி ஆகியன புதிய பிரேரணையை முன்வைத்துள்ளன. (நி-4)

---

## தமது இராணுவத்தை விட்டுக்கொடுக்காத பிரிட்டன் ஏன் இலங்கை இராணுவத்தை குறிவைக்கிறது

### பிரேமநாத் கேள்வி

(கொழும்பு)

தமது நாட்டு இராணுவ வீரர்களை, எந்தவொரு யுத்தக் குற்ற நீதிமன்றங்களிலும் நிறுத்தப் போவதில்லையெனக் கூறும் பிரித்தானியா, எமது நாட்டு இராணுவ வீரர்கள் குறித்து ஏன் சிந்திப்பதில்லையென ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்பாக, நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற அமைதிப் பேரணியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பிரேமநாத் சி தொலவத்த மேலும் கூறியுள்ளதாவது, "எமது நாட்டுக்கு எதிராக மனித உரிமைகள் பேரவையில் புதிய யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரித்தானிய இராணுவத்தினர் தொடர்பாக சிந்திப்பது குறித்து நாம் மகிழ்ச்சியடையும் அதேவேளை, யுத்தத்தில் ஈடுபட்ட வீரர்கள், இலங்கையின் இறையாண்மை குறித்து பிரித்தானியா ஏன் சிந்திப்பதில்லை.

யுத்தம் தொடர்பான தகவல்கள் அவர்களுக்கு தெரியாதெனக் கூற முடியாது. அனைத்து விடயங்களையும் தெரிந்து கொண்டு, தமது இலாபத்துக்காகச் செயற்ப்டுவதாகவே எமக்கு தோன்றுகின்றது.

மேலும் அவர்கள், இலங்கையில் இடம்பெற்றதை யுத்தமெனக் கூறாது, இனப்பிரச்சினைக்கான போராட்டம் என்றே அடையாளப்படுத்துகின்றனர்.

பிரித்தானியா கூறுவதைப் போன்று, வர்க்க ரீதியான, இனரீதியான போர்ராட்டம் ஒன்று இலங்கையில் நடைபெறவில்லை.

பயங்கரவாத அமைப்பொன்றை யுத்த ரீதியாகத் தோற்கடித்த யுத்தம் ஒன்றே இலங்கையில் நடைபெற்றது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

---

## இலங்கை விவகாரம்

### ஜெனிவாவில் இந்தியா, ஜப்பான் நடுநிலை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு ஆதரவாக 21 நாடுகளும், எதிராக 15 நாடுகளும் கருத்துகளை முன்வைத்துள்ளன.

மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கைக்கு எதிராக புதியதொரு தீர்மானத்தை முன்வைப்பதற்கு சில நாடுகள் முன்வந்துள்ளன.

இதற்கு பிரித்தானியா தலைமைத்துவம் வழங்கவுள்ளது. இதற்கு இலங்கை எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.


மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய நாடுகளில் 21 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளன. 15 நாடுகள் புதிய பிரேரணையை ஆதரித்துள்ளன. இந்தியா, ஜப்பான் உட்பட 10 நாடுகள் நடுநிலை வகிக்கின்றன.

பிரித்தானியா, நோர்வே, கனடா, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எதிர்த்து கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து பேசிய 21 நாடுகளில், பத்து நாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளாகும்.

ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், ஈரான், வியட்நாம், மாலைதீவுகள், கியூபா, நிகராகுவா, எரித்திரியா, நேபாளம், கம்போடியா, லாவோஸ், அஜர்பைஜான், வியட்நாம், பெலாரஸ், வட கொரியா, காபோன், பிலிப்பைன்ஸ், சிரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் இவற்றில் உள்ளடங்குகின்றன. (நி-4)

# யாழ்.றோயல் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு






ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணத் தொடரில் Qualifier 01 போட்டியில் தோல்வி யடைந்த யாழ். றோயல் அணியும் Eliminator போட் டியில் வெற்றிபெற்ற வடமராட்சி வேங்கைகள் அணியும் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற Qualifier 02 போட்டியில் யாழ். றோயல் அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி வேங்கைகள் அணி 16.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது.

ருக்மன்-17, வரலக்ஸன்-13 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ். றோயல் அணி சார்பாக வாமணன் 03 இலக்குகளையும் கோபிராம் 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

69 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.றோயல் அணி 10.3 ஓவர்களில் 03 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றனர்.

யனுதாஸ் 28, கௌதமன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் வடமராட்சி வேங்கைகள் அணி சார்பாக மதூஸன் 02 இலக்குகளையும் மோகன்ராஜ் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக யாழ். றோயல் அணியைச் சேர்ந்த ஜின் துஸன் தெரிவு செய்யப்பட்டார். (4)

## டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 400 விக்கெட்டுக்கள் வீழ்த்திய அஸ்வின்

அகமதாபாத் டெஸ்ட் கிரிக்கெட்டில், 2-வது இன்னிங்சில் ஜோஃப்ரா ஆர்ச்சரை வீழ்த்தியதன் மூலம் சர்வதேச டெஸ்ட் அரங்கில் 400 விக்கெட் வீழ்த்தி அஸ்வின் சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் கடந்த 24 ஆம் திகதி தொடங்கியது.

30 விக்கெட்டுகளில் 28 விக்கெட்டுகளை சுழற்பந்து வீச்சாளர்கள் வீழ்த்த போட்டி இரண்டு நட்களிலேயே முடிவடைந்தது.

இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டும், 2-வது இன்னிங்சில் 4 விக்கெட்டும் வீழ்த்தினார்.

2-வது இன்னிங்சில் ஜோஃப்ரா ஆர்சரை வீழ்த்தியபோது டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 400 விக்கெட் எனக் மைல்கல்லை எட்டினார். (4)

## கருத்தரங்கு பிற்போடல்


(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கொரோனாத் தாக்கம் அதிகரித்து செல்வதாலும் சாதாரண தர பரீட்சை காரணமாக பாடசாலை மண்டப அனுமதி கிடைக்காமையாலும் எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் நடத்த திட்டமிட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் ந.சுதேஸ்குமார் அறிவித்துள்ளார். (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## பெரு விளையாட்டுக்கான பயிற்சி முகாம்



மன்னார் மாவட்ட விளையாட்டு பிரிவும் மடு பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த பெரு விளையாட்டுகளுக்கான பயிற்சி முகாம் நேற்று வெள்ளிக்கிழமை மடு பிரதேச்செயலாளர் பிரிவில் உள்ள தட்சணா மருதமடு விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

உதைபந்து, கரப்பந்து மற்றும் கால் மேசைப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கான பயிற்சி முகாம் இவ்வாறு இடம் பெற்றது.

குறித்த பயிற்சி முகாமில் வட மாகாண விளையாட்டு பணிப்பாளர் எஸ்.முகுந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதோடு, மேலும் மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரிகளும் பெரு விளையாட்டுக்களில் பங்குபற்றும் வீரர்களும் கலந்து கொண்டிருந்ததோடு, பயிற்சிகளையும் வழங்கி வைத்தனர்.


குறித்த பயிற்சி முகாமிற்கான நிதி உதவியினை கிராம உத்தியோகத்தர் எஸ்.லூமாசிரியின் வேண்டுகோளுக்கினங்க மன்னார் பறப்பாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர் எம்.எடிசன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,285)

## நாமலுக்கு இம்ரானின் மகத்தான பரிசு



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் மேற்கொண்ட சந்திப்பின்போது, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது கையெழுத்துடனான கிரிக்கெட் மட்டையை நாமல் ராஜபக்ஷவுக்கு பரிசளித்துள்ளார்.


இதன்போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் தனது சார்பில் நினைவுப் பரிசொன்றை பாகிஸ்தான்பிரதமருக்கு வழங்கியதுடன், தனது நன்றிகளையும் தெரிவித்தார். (4)




உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையினால் (WTBF) முல்லைத்தீவு மாவட்டத்தில் பூப்பந்தாட்ட விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாக முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு பூப்பந்தாட்ட உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படங்கள்:-தவசீலன்)

# 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு

## பேராசிரியர் புஸ்பரட்ணம்



(அக்கராயன்)

திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்திற்கு அருகில் உள்ள இராவணன் கல்வெட்டுக்கருகில் பழைமைவாய்ந்த தமிழ் கல்வெட்டு ஒன்று கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என யாழ்.பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசியர் ப.புஸ்பரட்ணம் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தக் கல்வெட்டில் நீண்ட ஒரு பகுதி உடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்த கல்வெட்டுக்களில் உள்ள ஆறு வரி எழுத்துக்களைத் தெளிவாக வாசிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்தக் கல்வெட்டு அங்கிருந்த ஆலயம் ஒன்றுக்கு அது பெரும்பாலும் கோணேஸ்வரர் ஆலயம் ஆக இருக்க வேண்டும். அரிசி, நெல் என்பவற்றைத் தானமாக வழங்கியது பற்றிக் கூறுகின்றது.

அவ்வாறு வழங்கப்பட்ட நெல், அரிசி என்பவற்றின் அளவுகள் குறியீட்டு முறையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டு பற்றி மேலும் ஆய்வு செய்த தமிழகத்தில் முதன்மை கல்வெட்டு அறிஞரான சுப்பராயலு, கலாநிதி ராஜகோபால் போன்றவர்கள் இக் கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டது என அடையாளப்படுத்தியுள்ளனர்.

1070 சோழராட்சி முடிந்தன் பின்னர் பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டாலும் அவர்களும் தொடர்ந்து இந்து ஆலயங்களுக்கு ஆதரவு கொடுத்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இப்போது கிடைத்திருக்கின்ற இந்தக் கல்வெட்டு சோழர் ஆட்சியின் பின்னர் திருகோணமலையில் வாழ்ந்த இந்துக்களால் கோணேஸ்வரர் ஆலயம் பராமரிக்கப்பட்டு வந்ததற்கு நல்ல ஒரு சான்றாகக் காணப்படுகின்றது.

16 ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் உடைய ஆட்சியில் அவர்கள் கடைப்பிடித்த கலை அழிவு கொள்கையால் பல இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றாக கோணேஸ்வரர் ஆலயம் காணப்படுகின்றது.

இதை 1964 அளவுகளில் கோணேஸ்வரர் ஆலய கடற் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஆலய அழிபாடுகள், கல்வெட்டுக்கள், விக்கிரகங்கள் உறுதி செய்கின்றன. இந்த நிலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இக்கல்வெட்டானது மேலும் போர்த்துக்கேயர் ஆட்சியில் கோணேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டதற்கு ஒரு சான்றாகக்காணப்படுகின்றது.

எதிர்பாராத வகையில் மத்திய கலாசார நிதியத்தால் கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டு சூழலில் மேலும் சில கல்வெட்டுக்கள் சில கட்டட அழிபாடுகள் இருப்பதாக அறிய முடிகின்றது. ஆகவே அந்த இடத்தில் மேலும் ஆய்வுகள் செய்வதன்மூலம் கோணேஸ்வரர் ஆலயத்தின் பழைமையான வரலாற்றை அறியக்கூடிய அரிய பல கல்வெட்டுக் கள் கண்டுபிடிக்கலாம் என நம்பப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி-350)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா அபிவிருத்தி செய்யும்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையினை சீனா மேற்கொள்ளுமென அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் வாங்யி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சருடன் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்படிக்கையை இலங்கை மறுபரிசீலனை செய்ய முற்படுவதாக வெளியான தகவல்களுக்கு இடையே சீனாவின் வெளியுறவு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 2019 ஆம் ஆண்டு பதவியேற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் இந்த உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்யச் சீனாவுடன் பேச்சு நடத்தப்படும் என்று தெரிவித்திருந்தார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்கியமையை கண்டித்தே ஜனாதிபதி இத்தகையதொரு கருத்தினை வெளியிட்டிருந்தார். (நி-4)

# மரண அறிவித்தல்

## அமரர். குமாரசாமி ஆனந்தநடராசா



கொக்குவிலை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி ஆனந்தநடராசா (Jafferjee Brother இன் ஓய்வுபெற்ற ஊழியர்) 25.02.2021 இல் யாழ்ப்பாணத்தில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (முன்னாள் அதிபர் - கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) சிவஞானம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம்- கனகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ஆனந்தலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை)யின் கணவரும், கிருசாந்தி, சயந்தன் ஆகியோரின் தகப்பனாரும், துளசியின் மாமனாரும், காவியா, ஆதவன் ஆகியோரின் பேரனும், சரோஜினிதேவி, காலஞ்சென்ற சிவஞானதேவி, மகாதேவி, பத்மாதேவி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சிதம்பரநாதன், துரைராஜா, ஸ்ரீதாஸ், காலஞ்சென்றவர்களான சோதிநாதன், கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகலனும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.02.2021) சனிக்கிழமை 69, பிரதான வீதி, யாழ்ப்பாணம் துதி அந்திய கால சேவை மண்டபத்தில் பார்வைக்காக வைக்கப்படும்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் 69, பிரதான வீதி, யாழ்ப்பாணம் துதி அந்திய கால சேவை மண்டபத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
சயந்தன்:- +44 787 825 5914
ஞானகணேசன்:- +94 77 737 6450



யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:- சிவசாந்தன்)

# யாழ்.மாவட்டத்தில் 14 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக்களை தேடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 14565 பேர் வேலை வாய்ப்புக்களை தேடுவதாக புள்ளிவிபரங்கள் குறிப் பிடுகின்றன" என யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய மட்டத்தில் நடைபெறுகின்ற மூன்றாம்நிலை, தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையினை அபிவிருத்தி செய்வதற்கான மாவட்ட செயலக கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய ரீதியாக செயற்படுத்தப்படுகின்ற மூன்றாம் நிலை, தொழில் நுட்பக்கல்வி மற்றும் தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கமாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அங்குரார்ப்பண கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலையற்றோர் வீதத்தினை குறைப்பதனை நோக்கமாகக் கொண்டு இச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அத்தோடு தற்போது கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வேலைவாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் 14565 பேர் வேலைவாய்ப்புக்களை தேடுவதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. எனினும் இவ் எண்ணிக்கை சற்று அதிகமாக காணப்படலாம். இவ் வேலை தேடுவோர் க.பொ.த. உயர்தரம், க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரத்திற்கும் குறைந்த என்னும்பெறுபேறுகளின் அடிப்படையில் காணப்படுகின்றார்கள்.



மேலும் மூன்றாம் நிலை கல்வி தொடர்பான பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. அனைத்து பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படுகின்ற துறைசார் உத்தியோகத்தர்களை ஒருமுகப்படுத்தி இளைய சமூகத்தை சரியான பாதையில் வழிப்படுத்த இச் செயற்குழுக்கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட மட்டத்திற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு ஏழு உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

## வரணிப்பகுதியில் கசிப்பு உற்பத்தி கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வரணி மற்றும் மாசேரி பகுதியை அண்டிய எல்லையோர கண்டல் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர். இச் செயற்பாடு காரணமாக கிராம மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இச் சம்பவங்கள் தொடர்பாக சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டங்களின் போது பொலிஸாருக்கு தெரியப்படுத்திய போதிலும், நடவடிக்கைகள் எடுக்கவில்லை என கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (5-4-103)

## அனுமதியின்றிய கட்டடங்கள் இடித்தழிக்கப்படும்

### பிரதேச சபை தீர்மானம்

(அராலி)

வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் இடித்தழிக்கப்படும் என்ற தீர்மானம் நேற்றைய அமர்வின்போது நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானமானது நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

அத்துடன் இத்தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டதாகவும் ஆனால் தற்போது தான் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-104)

## ஆலயத்திருப்பணிக்கான மணல் இரவோடு இரவாக கொள்ளை

(கரணவாய்)

பருத்தித்துறை புலோலி குரும்பை கட்டிஞானவைரவர் ஆலயத்தில் திருப்பணிவேலைகளுக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபாயிற்கும் அதிகமான மணல் இரவோடு இரவாக இடம் இனம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றது. (5-4-60)




## இரத்தானமுகாம்

(குப்பிளான்)

யாழ். மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள இரத்தத்திற்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இரத்ததான முகாம் இடம்பெறும்.

ஈழத்தின் முற்போக்குப் பெண் எழுத்தாளரும், நாடக நடிகையும், நெறியாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான கலாலக்ஷ்மி தேவராஜாவின் ஞாபகார்த்தமாக இடம்பெறவுள்ள மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (5-4-18)



புத்தாக்க அரங்க இயக்கத்தினரின் வேடதாரி எனும் அரங்கச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. சஞ்சிகையின் முதல் பிரதியினை ஈழத்தமிழ் அரங்கின் பிதாமகர் குழந்தை ம.சண்முகலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

## குருதிக் கொடை முகாம்

(யாழ்ப்பாணம்)

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் குருதிக் கொடை முகாம்களின் வரிசையில் தொடர்ந்து 13 ஆவது தடவையாக இரத்ததான முகாம் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மாலை 3.30 வரை இளவாலை சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள ITS COMPUTER CENTRE இல் இடம் பெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள குருதித்தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக அனைத்து குருதிக்கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 324 1755 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5-4)



2019 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் பொ.சிவசுப்பிரமணியத்தால் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

# அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏலவிற்பனை

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணனிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணி வரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 08/03/2021 திங்கட்கிழமை | மு.ப. 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 02 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 08/03/2021 திங்கட்கிழமை | மு.ப. 11.00 | பி.செ கரவெட்டி |
| 03 | பிரதேச செயலகம் - தெல்லிப்பளை | 09/03/2021 செவ்வாய்க்கிழமை | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 04 | பிரதேச செயலகம் - உடுவில் | 09/03/2021 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.30 | பி.செ உடுவில் |
| 05 | பிரதேச செயலகம் - காரைநகர் | 10/03/2021 புதன்கிழமை | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 06 | பிரதேச செயலகம் - சங்கானை | 10/03/2021 புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ சங்கானை |
| 07 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 10/03/2021 புதன்கிழமை | பி.ப 01.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 08 | பிரதேச செயலகம் - சாவகச்சேரி | 12/03/2021 வெள்ளிக்கிழமை | மு.ப 09.30 | பி.செ சாவகச்சேரி |
| 09 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 12/03/2021 வெள்ளிக்கிழமை | மு.ப 11.00 | பி.செ கோப்பாய் |
| 10 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 15/03/2021 திங்கட்கிழமை | மு.ப 09.30 | பழைய யாழ்ப்பாணப் பிரதேச செயலக கட்டடம் (சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) |
| 11 | பிரதேச செயலகம் - நல்லூர் | 15/03/2021 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பி.செ நல்லூர் |
| 12 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 16/03/2021 செவ்வாய்க்கிழமை | மு.ப 09.30 | பி.செ நெடுந்தீவு |
| 13 | தகவல் தொழில்நுட்ப பூங்கா- யாழ்ப்பாணம் | 16/03/2021 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | தகவல் தொழில்நுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |
| 14 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 17/03/2021 புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ மருதங்கேணி |
| 15 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 18/03/2021 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 16 | பிரதேச செயலகம் - வேலணை | 18/03/2021 வியாழக்கிழமை | பி.ப 02.00 | பி.செ வேலணை |
| 17 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 19/03/2021 வெள்ளிக்கிழமை | மு.ப. 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

க.மகேசன்
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(C-1535)

# மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை பக்கச் சார்பானதாம்

## என்கிறார் கெஹலிய

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை முற்றிலும் பக்கச்சார்பானது என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது என வெகுஜன ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டி குண்டசாலை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபமொன்றில் கலந்து கொண்ட பின்னர், ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரபாகரனும் அவரது நண்பர்களும் பிரபாகரனின் மகளுக்கு வைர மோதிரங்களை அணிவித்து மகிழ்ச்சி கண்ட போது, அப்பாவி தமிழ் குழந்தைகளின் கழுத்தில் சயனைட் குப்பிகளை தொங்கவிட்டு சிறுவர் படையினராக மாற்றினர்.

அப்பாவி தமிழ் குழந்தைகளுக்கு புத்தகங்களை வழங்குவதற்குப் பதிலாக துப்பாக்கிகளை ஒப்படைப்பதன் மூலம் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவோ அல்லது வேறேதும் அமைப்புகளோ இதுவரை ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இலங்கைக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்டதும் ஆதாரமற்றதுமான முறையில் மனித உரிமைகளுக்கான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வருவதாகவும், அப்பாவி தமிழர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் மீது பிரபாகரனும் அவரது சகாக்களும் அளித்த அழுத்தம் மனித உரிமை மீறல் இல்லையா? எனவும் அமைச்சர் கேள்வியெழுப்பினார்.

மேலும் போரின் கடைசி நாட்களில் இங்கிலாந்தின் லோட் நெஷ்பி மற்றும் அமெரிக்காவின் ஸ்மித் இருவரும் இலங்கையின் தினசரி அறிக்கைகளிலிருந்து துல்லியமான தகவல்களைப் பெற்றுள்ளனர்.

இதை மனித உரிமை ஆணைக்குழு கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.(நி-4)



கொவிட்-19 தொற்றுக்குள்ளாகிய தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன் குணமடைய விசேட வழிபாடு ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

(படம்: தேவாநந்தன், சப்தசங்கரி)

# நன்றி தெரிவித்தார் இம்ரான்கான்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக உயிரிழப்பவர்களின் சரீரங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கியமைக்கு இலங்கை அரசாங்கத்துக்கு பிரதமர் இம்ரான் கான் நன்றி தெரிவித்துள்ளார்.

பிரதமர் இம்ரான் கான், தனது டுவிட்டர் பக்கத்திலேயே இவ்வாறு இலங்கை அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம்அனுமதிவழங்கியதன் ஊடாக பரஸ்பர புரிந்துணர்வு மேலும் வலுவடைவதற்கு இந்த விடயம் ஏற்புடையதாக அமைந்துள்ளது.

அந்தவகையில் இவ்விடயத்துத்துக்கு இலங்கையின் தலைமைக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவிக்கிறது' என டுவிட் செய்துள்ளார். (நி-4)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. த.ஜெபதாஸ்

( B.A, BED, DSM,DHRM, Dip.in - Magt)

எமது வித்தியாலய முதல்வர் அவர்கள் 25.02.2021 அன்று முதுகலைமாணி பட்டத்தினை பெற்றமைக்காக அவரை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(5928)



வாழ்த்துவோர்: ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
கிளி/மாசார் அ.த.க. பாடசாலை.



**JAFFNA**

**OFFICE SPACE FOR RENT OR SALE**

**4000 SQU FEET**

**THREE STORIED BUILDING**

**LOCATED IN THE JAFFNA**

**OPPOSITE BUS STAND**

**T.P:- 076 3156470**

(C-1537)


## பெயர் மாற்ற அறிவித்தல்

கூழாவடி மேற்கு ஆனைக்கோட்டையில் வசிக்கும் மேரி ஹறியற் (5965 41488V) ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை மரியகொறற்றி என மாற்றம் செய்கிறேன் என்பதனை இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத் தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் மரியகொறற்றி என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

**மரியகொறற்றி**

(5927)

# பாடசாலைகளிலுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 50 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் நிலவுகின்ற குடிநீர் தட்டுப்பாட்டுக்கு நிரந்தர தீர்வுகள் காணப்பட வேண்டும் என பெற்றோர்களினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.**

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்கள் காணப்படுகின்ற 50 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் குடிநீர் நெருக்கடி காணப்படுகிறது.

கடந்த காலங்களில் நடைபெற்ற மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயங்கள் ஆராயப்பட்ட போதிலும் நிரந்தர தீர்வுகள் கிடைக்கவில்லை.

இனி வருங்காலம் வறட்சி காலம் என்பதால் பாடசாலைகளில் குடிநீர் நெருக்கடி கூடுதலாகக் காணப்படும்.

இருப்பினும் பல பாடசாலைகளுக்கு பிரதேச சபைகள் குடிநீர் விநியோகங்களை ஆண்டு தோறும் வறட்சியான காலங்களில் வழங்கி வருகிறது.

பாடசாலைகளில் நிலவுகின்ற குடிநீர் நெருக்கடிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நிரந்தரத் தீர்வுகளை வழங்க வேண்டும் எனப் பல பொது அமைப்புகள் மனுக்கள் மூலம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றன. (5-4-350)

# வாழ்வாதாரத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் OIERR CEYLON நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒன்றிணைந்த சமாதானத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மீள்குடியேறியவர்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் திட்ட அறிமுக கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த திட்டம் ரூபாய் 190 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 2015 ஆம் ஆண்டின் பின்னர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களை பயனாளிகளாகக்கொண்டு கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

உள்ளூர் அரச அமைப்புக்களை வலுப்படுத்தல், நிலைத்த வாழ்வாதார உதவிகளை வழங்குதல், சமூக அமைப்புக்களை வலுப்படுத்தல் என்கின்ற அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டம் தொடர்பாக குறித்த நிறுவனத்தாரால் விளக்கமளிக்கப்பட்டதுடன் இதன்போது திட்டத்துடன் தொடர்புடைய துறை சார் உத்தியோகத்தர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல்பணிப்பாளர் உட்பட பல்வேறு திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். (5-6-281)






பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினால் **Women's Fund of Asia** நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்கள் வலுவூட்டல் செயலமர்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் வளவாளராக வாசுகி ஜெயசங்கர் கலந்து கொண்டார். (படம்:- தவசீலன்)

# வீதியோரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களால் குடிநீர் குழாய் பொருத்தும் பணிகள் தாமதம்

(முறிகண்டி)

நீர்வழங்கல் வேலைத் திட்ட பணிகளை முன்னெடுக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை எல்லையில் உள்ள வர்த்தக நிலையங்களால் இடையூறுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சில பிரிவில் குறித்த சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் முறிகண்டியில் உள்ள நான்கு கிராமங்களிற்கான குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் நீர்க்குழாய்கள் பொருத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இழுபறி நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைப்பகுதியில் வர்த்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான அனுமதியினை புதுக்குடியிருப்பு பிரதேச சபையும் வழங்கியுள்ளது.

இதனால் அப்பகுதியில் குழாய்களை பொருத்துவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. குறித்த வர்த்தக நிலையங்களை அகற்றி, நிர்மாணப் பணிகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லையில் இவ்வாறு வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையும் வர்த்தக நிலையத்திற்கான அனுமதியை வழங்கி வருகின்றமை பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றது.(5-4-100)

# காப்பெற் வீதிகளாக மாறும் வவுனியா வீதிகள்



(நெளுக்குளம்)

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குன்றும் குழியுமாக போக்குவரத்துக்கு ஏற்றவகையில் இல்லாமல் பல வீதிகள் வவுனியா மாவட்டத்தில் காணப்பட்டன.

இவ்வீதிகளை பயன்படுத்துவதில் மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியிருந்தனர்.

இவ்வீதிகளை புனரமைத்து தருமாறு வவுனியா மாவட்டத்தில் உள்ள பல கிராம மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த சாலைத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 271.48 கிலோ மீற்றர் வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றுவதற்கான வேலைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகள் காப்பெற் இடும் திட்டம் மூலமாக தற்போது பல கிராமங்களின் உள் வீதிகள் பலவும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வவுனியாவின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளையும்உள்ளடக்கியவகையில் குறித்த வீதிகள் அமைப்பதற்காக 12947.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பழைய மாணவர்களின் செயற்பாடு



(கிளிநொச்சி)

கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்தில் புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு அதே பாடசாலையின் பழைய மாணவர் அழகன் 2021 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட 18 மாணவர்களுக்கு தலா 5000 ரூபாய் வீதம் வைப்பிலிட்டு வங்கிப் புத்தகம் கையளிக்கப்பட்டது.

கடந்த ஆண்டும் இவ்வாறு இடம்பெற்றது. இதுபோன்று வருடாந்தம் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு பணம் வைப்பிலிடப்படும் என்பதுடன் இத்திட்டத்தின் பிரதான நோக்கம் மாணவர்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும் பிற்காலத்தில் மாணவர்களின் கல்வி தேவையினை பூர்த்தி செய்தலுமாகும் என பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர். (5-4-271)

# சஞ்சிகை விழா

(கிளிநொச்சி)

அம்பலம் குழுமத்தின் வெளியீடான செல்வி.ஜனகா நீக்கிலாஸின் நடுகை மாதாந்த சஞ்சிகை விழா நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 4 மணியளவில் கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் தீச்செல்வன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொள்வார். (5-4)

# இராசிபலன்

**27.02.2021**
**மாசி 15, சனிக்கிழமை**
**பூரணை பிற்பகல் 2.39 மணிவரை**
**மகம் பிற்பகல் 12.03 மணிவரை**
**சுபநேரம் 3.29 -4.59 மணிவரை**
**இராகுகாலம் 9.29-10.59 மணிவரை**
**சந்திராஷ்டம்- திருவோணம், அவிட்டம்**
**மாசிமகம், பூரணை விரதம்**

**மேஷம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சூழ்நிலைக்கேற்ப குணத்தை மாற்றிக் கொள்வீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்:** காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்:** காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியாக பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், உங்கள் திறமைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** மருத்துவச் செலவுகள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், வியாபாரம் மேலோங்கும் நாள்.

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விவேகத்திலும் வீரம் அருள்செயல் புரியும்.**

# மாசி மக விரதத்தின் மகிமை



இன்று மாசி மகம். இது ஒரு புனிதம் நிறைந்த புண்ணிய நன்னாளாகும். மாசி மக விரதம் முறையாக அனுட்டிக்கப்பட வேண்டும். அம்பிகை அவதாரம் செய்த தினமும் இது வேயாகும்.

பிரகஸ்பதி என அழைக்கப்படுகின்ற வியாழபகவான் மக நட்சத்திரத்துடன் கூடி கும்பராசியில் செல்லும் வேளையில் இப்புண்ணிய நேரம் உற்பத்தியாகின்றது. இந்த நேரமே மாசிமகம். இது மகாமகம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்த விரதத்தை அனுட்டிக்க விரும்புபவர்கள் காலையில் எழுந்து ஸ்நானம் செய்து புனித புண்ணிய நதிகளிலோ அல்லது ஆறு, நீர்நிலைகள், கீரிமலை போன்றவற்றில் சந்தியாவந்தன் முடித்து சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.

முடியுமாயின் ஆலய தரிசனம் முடிந்து வீடுதிரும்பி சிவனடியார் ஒருவருக்கு மதிய உணவு பரிமாற வேண்டும். சாப்பிடுவதற்கு முன் காகத்துக்கு வைத்து அது சாப்பிட்ட பிறகே நாம் உண்ணுதல் சிறப்பாகும். இன்றைய மாசி மகம் பற்றி முன்னோர் கூறுகின்ற ஒரு புராணக் கதையும் வழக்கிலிருக்கிறது.

ஒரு நாள் வருணபகவானைப் பிரம்மஹத்தி தோஷம் பீடித்துக் கொண்டது. அது மழைக்கு அதிதேவதையான வருணனைச் சமுத்திரத்தின் அடியிலே கட்டி வைத்திருந்தது. இதையறிந்த தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி பரம்பொருளான சிவபெருமானிடம் முறையிட்டனர். அவரும் உடனே எழுந்தருளி வந்து வருண பகவானைப் பீடித்திருந்த பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கிக் கட்டை அறுத்தருளினார். வருணபகவான் கட்டை அறுத்தெறிந்து அவரைக் கட்டினின்றும் மீட்டருளிய நாளே மாசி மகம்.

இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் மதிய ஒருபொழுதுண்டு இரவு பால் பழம் மட்டும் அருந்தலாம். அன்று முழு நாளும் சிவ சிந்தனையுடன் இருக்கவேண்டும். வீண்வார்த்தைகள் பேசக்கூடாது. தேவார திருவாசகங்களை ஓதுதல் நல்லது. மாசிமக விரதமிருந்தால் முத்திப்பேறுகிட்டும் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

உயிர்கொல்லி நோயான கொரோனாவின் உடும்புப் பிடியிலிருந்து விலகி நற்கதி யடைய மாசிமக விரதங்காத்து நம்மை நாமே தற்காத்துக் கொள்வோமாக.

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

**வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.**

அனைத்து வாக்காளர்களும் சகல தேர்தல்களிலும் வாக்களிப்பது கட்டாயமென்றும், இதற்கான சட்டக் கொள்கைகள் உருவாக்கப்பட்ட வேண்டுமெனவும் ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய சஹ்றான் உள்ளிட்ட குழுவினர், வாக்களிப்புகளில் ஈடுபடவில்லையென சாட்சியங்கள் கிடைத்துள்ளன. அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் வாக்களிக்கவிடாமல் தடுக்கப்பட்டுள்ளனர் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, இலங்கையின் தேர்தல் முறைமை குறித்துப் பரிந்துரைகளை முன்வைத்துள்ள ஆணைக்குழு, தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடுவதற்காக நிலையான அரசாங்கம் ஒன்று அவசியம் எனவும் பரிந்துரைத்துள்ளது.

பலவீனமான அரசாங்கம் ஒன்று காணப்பட்டதன் காரணமாக, இலங்கையில் தாக்குதல்களை நடத்தலாம் என, சஹ்ரானின் குழு எண்ணியதாக சாட்சியங்கள் கிடைத்துள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், வேறொரு கட்சியுடன் இணைவதைத் தடுப்பது தொடர்பான ஏற்பாடுகளை, ஒன்றிணைக்கும் பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# அமைச்சர் விமலுக்கு எதிராக ஆளும் தரப்புக்குள் போர்க்கொடி

(கொழும்பு)

ஆளும் தரப்புக்குள் இருந்து கொண்டு பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியை மாற்ற வேண்டுமென தெரிவித்து குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்சவுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குள் இருக்கும் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

அலரிமாளிகையில் இச்சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கொண்டுசெல்வதை பசில் ராஜபக்ஷ, பின்வரிசை உறுப்பினர்களிடம் உறுதி செய்ததாக அலரிமாளிகை வட்டார தகவல்கள் தெரிவித்தன.

மேற்படி சந்திப்பில் 40றுக்கும் மேற்பட்ட மொட்டுக்கட்சியின் எம்.பிக்கள் பங்கேற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## முல்லாவின் வெற்றியின் இரகசியம்

முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்து நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் முல்லாவிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தபோது அவரை நோக்கி "முல்லா அவர்களே தாங்கள் பல விதத்திலும் மக்களிடம் புகழ் பெற்றவராகத் திகழுகிறீர்.

மன்னரிடம் உங்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. இவ்வாறெல்லாம் நீங்கள் புகழும் பெருமையும் பெறுவதற்கு ஏதோ ஒரு ரகசியம் இருக்க வேண்டும். அந்த ரகசியம் என்னவென்று தயவு செய்து எனக்குக் கூறுவீர்களா?" என்று கேட்டார்.

"உண்மையிலே என் வெற்றிக்கு அடிப்படையான ரகசியம் ஒன்று இருக்கிறது. ஆனால் அது ரகசியமாயிற்றே.

அதை ஒருவரிடம் சொனனால் அது அப்படியே பரவிக் கொண்டே போகுமே" என்று முல்லா சொன்னார்.

"முல்லா அவர்களே, என்னிடம் எந்த இரகசியத்தைச் சொன்னாலும் உண்மையிலே அது என்னை விட்டுத் தாண்டாது தயவு செய்து அந்த இரகசியத்தை எனக்கு மட்டும் கூறுங்கள் " என்று நண்பர் வேண்டிக் கொண்டார்.

"நான் என் வெற்றியின் இரகசியத்தை உங்களிடம் கூறினால் யாரிடமும் கூற மாட்டீர்களே" என்றார் முல்லா.

"என்னை நம்பலாம் என்னிடமிருந்து ரகசியம் ஒரு போதும் வெளியே போகாது" என்றுஉறுதியாகக் கூறினார் நண்பர்.

"யாராவது உம்மிடம் வந்து ஏராளமான பணம் தருகிறேன் என்று ஆசை காட்டினால்?" என்று கேட்டார் முல்லா.

" கோடிப் பொன் தருவதாக



ஆசை காட்டினால் கூட யாரிடமும் கூற மாட்டேன்" என்று திடமாகக் கூறினார் நண்பர்.

" அப்படியானால் நம்பி உங்களிடம் ரகசியத்தைக் கூறலாம். மறந்துகூட இதைப் பிறரிடம் சொல்ல மாட்டீர்கள் என்று நம்பலாம் இல்லையா?" என்று முல்லா கேட்டார்.

"என்னை முழு அளவுக்கு நம்பலாம்" என்று வாக்குறுதி கொடுக்கும் விதத்தில் நண்பர் சொன்னார்.

"உண்மையிலேயே நீர் ரகசியத்தைக் காப்பாற்றக் கூடியவர்தான். என் வெற்றிக்கான இரகசியத்தைக் கூறினால் நான் இரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாத முட்டாள் ஆகிவிடுவேன்.

அதனால் அன்பு நண்பரே என் இரகசியத்தை உமக்குக் கூறத் தயாராக இல்லை. நானும் என் இரகசியத்தைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?" எனக் கூறியவாறு முல்லா அந்த இடத்தை விட்டு அகன்றார்.

# மகாபாரதம்



**04**

**அவள் அழகும், இளமையும் கெடாமலிருக்க இப்பசுவை அவளுக்குத் தர விரும்புகிறேன்" என்றாள்.**

**மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற பிரபாசன் மற்ற வசுக்களுடன் காமதேனுவை கன்றுடன் பிடித்துக் கொண்டு வந்தான்.**

**வசிஷ்டர் ஆசிரமத்திற்கு வந்து பார்த்த போது பசுவும் கன்றும் களவாடப்பட்டிருப்பதைக் கண்டார்.**

**என் பசுவையும், கன்றையும் களவாடிய வசுக்கள் மண்ணில் மானிடராகப் பிறக்கட்டும் என சபித்தார்.**

**வசிஷ்டரின் சாபத்தை அறிந்த வசுக்கள் ஓடோடி வந்து பசுவையும் கன்றையும் திருப்பிக் கொடுத்து விட்டு அவர் காலில் விழுந்து மன்னிக்க வேண்டினர். பிரபாசனைத் தவிர மற்றவர்கள் உடனே சாப விமோசனம் அடைவர்.**

**பிரபாசன் மட்டும் நீண்ட காலம் மண்ணுலகில் வாழ்வான். அவன் பெண் இன்பத்தைத் துறப்பான்.**

**சந்ததியின்றி திகழ்வான். சாத்திரங்களில் வல்லவனாக திகழ்வான், எல்லோருக்கும் நன்மை செய்வான்" என்றார் வசிஷ்டர்.**

**வசிஷ்டரின் சாபத்தை சொன்ன கங்கா தேவி "பிரபாசன் என்னும் வசுவாகிய இவனை நான் என்னுடன் அழைத்துச் செல்கிறேன்.**

**பெரியவன் ஆனதும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். நானும் தாங்கள் அழைக்கும் போது வருகிறேன் என்று கூறி விட்டு மறைந்தாள்.**

**தேவவிரதன் என்றும், காங்கேயன் என்றும் பெயர் கொண்ட அவன் மேலான குணங்களுடன் வளர்ந்தான். மனைவியையும், மகனை யும் இழந்த சந்தனு பெரிதும் துன்ப வேதனையுற்றான்.**

**பின், மீண்டும் நாட்டாட்சியில் நாட்டம் செலுத்த ஆரம்பித்தான். அஸ்தினாபுரத்தை தலைநகராய்க் கொண்டு அனைவரும் போற்றும் விதமாய் அரசாண்டான்.**

**இந்திரனுக்கு இணையானவனாகவும் சத்தியம் தவறாதவனாகவும் விருப்பு வெறுப்பு அற்றவனாகவும் வேகத்தில் வாயுவுக்கு இணையாகவும் சினத்தில் எமனுக்கு இணையாகவும் அறநெறி ஒன்றையே வாழும் நெறியாகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தான்.**

**சந்தனு, காட்டில்வேட்டையாடிக் கொண்டிருந்த போது கங்கை நதியைக் கண்டான். இந்த நதியில் நீர் ஏன் குறைவாக ஓடுகிறது. பெருக்கெடுத்து ஓடவில்லையே என்று எண்ணியபடியே நின்றான்.**


**அப்போது ஒரு வாலிபன், தன் அம்பு செலுத்தும் திறமையால் கங்கை நீரை தடுத்து நிறுத்துவதைக் கண்டான்.**

(தொடரும்)

# உலகளவில் பெரும் மனிதாபிமான நெருக்கடியில் ஏமன்; உடனடி நிதியுதவி கோருகிறது ஐ.நா.

(ஜெனிவா)

**போரினால் பாதிக்கப்பட்ட ஏமனில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக இவ்வாண்டு 3.85 பில்லியன் டொலர் தேவைப்படுவதாக ஐ.நா.சபை தெரிவித்துள்ளது.**



இந்நிலையில், உலகில் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்துள்ள ஏமனுக்கு உதவ வளைகுடா நாடுகள் முன்வர வேண்டுமென ஐ.நாவின் உதவித் தலைவர் மார்க் லோகொக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம்மற்றும்குவைத் ஆகிய நாடுகளிடமிருந்து கிடைத்த பெரும் நன்கொடைகள் மற்றும் நிதியுதவி காரணமாக கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஐ.நாவால் ஏமனில் பஞ்சத்தைத் தடுக்க முடிந்தது.

எனினும், தற்போதைய காலநிலைமையில் உதவி நடவடிக்கைகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவியைக் குறைத்து வருவதாகவும் இது மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், 2021 ஆம் ஆண்டுக்குத் தேவையான நிதியுதவியை விரைவாகச் செய்ய வேண்டுமென அவர் வளைகுடா நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் பாண்டியன் காலமானார்




(சென்னை)

தமிழகம், சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் சிகிச்சை பலனின்றி காலமானார்.

சிறுநீரக பாதிப்பு, குறைந்த இரத்த அழுத்தம் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த தா.பாண்டியன் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலமானார்.

இந்நிலையில், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்டோர் அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தனர். (நி-4)

## பப்புவா நியூ கினியாவின் தந்தை சோமரே காலமானார்



(மொஸ்கோ)

பப்புவா நியூகினியாவின் முதல் பிரதமர் மைக்கேல் சோமரே 84 வயதில் காலமானார். "தேசத்தின் தந்தை" என்று அழைக்கப்படும் சோமரே 1975 இல் அவுஸ்திரேலியாவிலிருந்து சுதந்திரத்திற்கு பசுபிக் தீவுக்கூட்டத்தை வழிநடத்தி நான்கு முறை பிரதமராக பணியாற்றினார்.

பல பப்புவா நியூகினியர்கள் தங்கள் தந்தையை தங்கள் சொந்த "தந்தை மற்றும் தாத்தா" என்று ஏற்றுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சுதந்திரத்திற்கு முன்னர், சோமரே அவுஸ்திரேலிய நிர்வாகத்தின் கீழ் பப்புவா நியூகினியாவுக்கான முதல்வராகவும் பணியாற்றினார். (நி-4)

## தடுப்பூசிகளின் செயற்றிறனை பலவீனப்படுத்தக் கூடிய புதிய வைரஸ் கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் தடுப்பூசிகளின் செயற்றிறனைப் பலவீனப்படுத்தக்கூடிய புதிய வைரஸ் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

B.1.526 என அழைக்கப்படும் புதிய மாறுபாடு, நவம்பர் மாதம் நியூயோர்க் நகரில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் தொடர்ந்து உருவாகி வருவதால், தடுப்பூசிகளை மாற்றியமைக்க வேண்டும் என்று பென் மாநில பல்கலைக்கழகத்தின் பரிணாம நுண்ணுயிரியலாளர் மருத்துவர் ஆண்ட்ரூ ரீட் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மாறுபாடு, இப்போது 45 மாநிலங்களில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு தொற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பூசி; இந்தியாவின் செயலை பாராட்டிய உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பூசியை அனுப்பி உதவி வரும் இந்தியப் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, பிரதமர் மோடியின் உதவும் செயலை மற்ற நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று புகழாரம் சூட்டியுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸைத் தடுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கோவாக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசி போடும் பணிகள் கடந்த மாதம் 16 ஆம் திகதி முதல் தொடங்கி நடந்து வருகிறது. முதல் கட்டமாக முன்களப் பணியாளர்கள், மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்டோருக்குத் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இது தவிர ஆபிரிக்க நாடான கானாவுக்கு 6 இலட்சம் கோவிட் தடுப்பூசிகளை நேற்று முன்தினம் மத்திய அரசு சார்பில், யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் அனுப்பி வைத்துள்ளது. 92 நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பூசியை வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதுவரை 229 இலட்சம்டோஸ்கொரோனா தடுப்பூசிகள் உலக நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவுக்கும் பிரதமர் மோடிக்கும் உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ராஸ் அதானோம் கெப்ரியாசிஸ் பாராட்டு தெரிவித்து, புகழாரம் சூட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் டுவிட்டரில் பதிவிட்ட கருத்தில், "கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கிவரும் இந்தியாவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றி. கோவாக்ஸின் மற்றும் கோவிட் தடுப்பூசிகளை 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு வழங்கி, சுகாதாரப் பணியாளர்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும்தடுப்பூசிமுகாம்களைத்தொடங்கி வைக்கும் உங்கள் கடப்பாடு பாராட்டுக்குரியது. உங்களின் செயலை உதாரணமாக எடுத்து அனைத்து நாடுகளும் பின்பற்றுவார்கள் என நம்புகிறேன்" என கெப்ரியாசிஸ் புகழாரம் சூட்டியுள்ளார். (நி-4)

## அடையாளம் தெரியாத சிறைக்கு மாற்றப்பட்டார் நவல்னி



(மொஸ்கோ)

சிறையில் அடைக்கப்பட்ட ரஷ்ய எதிர்க்கட்சி அரசியல்வாதி அலெக்ஸி நவல்னி மொஸ்கோவிற்கு வெளியே ஒரு அடையாளம் தெரியாத தடுப்பு நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய மனித உரிமைகள் ரஷ்ய நீதிமன்றின் இத்தீர்ப்பானது சட்டவிரோதமானது என்று கூறி விமர்சித்துள்ளதுடன், காவலில் இருக்கும் நவல்னியின் உயிருக்கு ஆபத்துக்கள் இருப்பதைக் காரணம் காட்டி, அவரை விடுவிக்க ரஷ்ய அரசாங்கத்திற்கு உத்தரவிட்டது.

எனினும் அந்தக் கோரிக்கையை ரஷ்யா மறுத்துவிட்டது. (நி-4)

# 10 ஆவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ஒரு முன்னணி தனியார் வைத்தியசாலையின் பத்தாவது மாடியில் இருந்து குதித்து ஒருவர் நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் ஒரு முன்னணி தொழிலதிபரின் 30 வயதுடைய புதல்வர் ஆவார்.

இது தொடர்பான விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# ஓமானில் சிக்கிய மேலும் சிலர் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் இலங்கைக்கு வருகை தர முடியாமல் ஓமானில் சிக்கியிருந்த 315 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஓமானின் மஸ்கட் விமான நிலையத்திலிருந்து கடடுநாயக்க விமான நிலையத்தை குறித்த இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை வந்தடைந்துள்ளனர். குறித்த அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களை தனிமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-4)

# போதைப்பொருள் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கவேண்டும் - சஜித்

(கொழும்பு)

நாட்டடில் 30 வருடங்கள் காணப்பட்ட பயங்கரவாதத்தை ஒழித்தது போன்று போதைப்பொருள் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அத்துடன், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு சுதந்திர மற்றும் சுயாதீன நீதித்துறையில் மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 19 3/4 செவ் 2 சூரி3 ல் உயரம்:5'7"
தகைமை/தொழில்: CISCO Network Engineering, Computer Application Assistant.
எதிர்பார்ப்பு:படித்தபெண்.உள்நாடுமட்டும்
தொ.இ: B/11508

பிறப்பு:1979 இந்து
நட்சத்திரம்: பூராடம் கி.பா: -செவ் 2 சூரி5 ல்
தகைமை/தொழில்:BSc(Eng) (Colombo) MSC (Com.Eng) UK. Work -Engineer
எதிர்பார்ப்பு:Doctor,Engineer,Bank, அரச உத்தியோகம். வீடுகட்டாயம். மணமகள் உள்நாடுமட்டும்
தொ.இ: B/11511

பிறப்பு:1987இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா: 9 3/4செவ் 5 சூரி6 ல் உயரம்:5'10"
தகைமை/தொழில்: CIMA (ACMA,CGMA), ACCA Finalist. Work – Senior Accountant in a UK firm நிரந்தரம்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி. வைத்தியர். அரச தனியார் உத்தியோகம் உள்ள.உள் நாட்டு மணமகள்.
தொ.இ: B/11513

பிறப்பு:198-3 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: - செவ் 1சூரி2ல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்:சுவிஸ் வியாபாரம் PRஉண்டு.
எதிர்பார்ப்பு:படித்தபெண்.உள் நாடுமட்டும்
தொ.இ: B/11514

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 56செவ் 11சூரி1 ல் உயரம்:5'6"
தகைமை/தொழில்:. M.B.B.S Docotor
எதிர்பார்ப்பு:வைத்தியர். பொறியியலாளர்,வங்கி முகாமையாளர்க்கு ஒப்பான மணமகன். உள்நாட்டு மணமகன் விரும்பத்தக்கது. தவிர்க்கமுடியாதவிடத்து வெளிநாடும் யோசிக்கலாம்
தொ.இ:G/11551

பிறப்பு: 1991இந்து நட்சத்திரம்:கேட்டை
கி.பா:12 -செவ் 2 சூரி10 ல் உயரம்:168cm
தகைமை/தொழில்:MBBSவைத்தியர் நிரந்தரம்.
எதிர்பார்ப்பு:வைத்தியர் ஆகவும் எமது நாட்டில் இருந்து தொழில் புரிபவராகவும் இருக்க வேண்டும்
தொ.இ:G/111553

பிறப்பு:1989 இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா:செவ்11 சூரி8 ல் உயரம்:5.2
தகைமை/தொழில்:Diploma Teacher (GOV)
எதிர்பார்ப்பு: வெளிநாடு. உள்நாடு ஆயின் அரச உத்தியோகம்
தொ.இ:G/11554

பிறப்பு: 1987 கிறிஸ்தவம் (RC)
நட்சத்திரம்:பரணி
கி.பா:செவ்.சூரி4 ல் உயரம்:5"
தகைமை/தொழில்:B.A (Hons) அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:உள்நாடுபட்டதாரி. வெளிநாடு அரச உத்தியோகத்தர்
தொ.இ:G/111555

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2239

**பிரதா**


அடுத்தவங்க எழுதுன புத்தகத்தை பார்த்து பாடம் நடத்துறாங்க. அது தப்பில்லையாம்...



நாம அடுத்தவனை பார்த்து எழுதுனா தப்பாம்...

**சந்தோஷ்**


எனக்கொரு சிநேகிதி சிநேகிதி தென்றல் மாதிரி



தென்றல் மாதிரி எங்கம்மா இருக்காளுங்க. எல்லாம் மென்டல் மாதிரிதான் இருக்காளுங்க.

**கவீந்தினி**

சண்டையில் ஒருவர்தான் வெல்ல முடியும்...



சமாதானத்தில் இருவரும் வெல்ல முடியும்...

**சுபலக்ஷன்**

முடிவே இல்லாத போராட்டம் தான் இந்த வாழ்க்கை...



முடியும் வரை போராடு வென்று விடலாம்...

**ராகுல்**





**ஈஸ்வரன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொரோனாவால் சிக்கிச் சீரழியும் பொருளாதாரம் ஒருபுறம் சர்வதேசத்தால் தனிமைப்படுத்தப்படும் நிலை மறுபுறம்



(கொழும்பு)

சர்வதேசத்தால் தனிமைப்படுத்தப்பட்டு வரும் நாடாக இலங்கை உள்ளது என சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

சமூக நீதிக்கான தேசிய அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

எமது நாடு சிக்குண்டுள்ள நூல் பந்து போல், அனைத்து பக்கத்தாலும் சிக்குப்பட்டிருக்கின்றது. ஒரு பக்கத்தால் கொவிட் தொற்று காரணமாக மக்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சிக்குள்ளாகி இருக்கின்றது. வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது.

மூன்று வேளை உண்ணாமல் இருக்கும் பல குடும்பங்கள் இன்று எமது நாட்டில் இருக்கின்றன.

இவ்வாறு ஒரு பக்கத்தால் நாடு சிக்கிக் கொண்டிருக்கையில் அடுத்த பக்கமாக, உலகில் பலம்மிக்க நாடுகள் சில இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றது. அதில் பொருளாதார தடை விதிப்பது தொடர்பாக பேசப்படுகின்றது.

பிரித்தானியா, ஜேர்மன், கனடா உட்பட இலங்கை தொடர்பாக செயற்பட்டுவரும் குழுக்களுக்கு சொந்தமான சில நாடுகளால் இலங்கை தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கும் பிரேரணையின் முதலாவது சட்டமூலம், கடந்த தினம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பிரேரணை தொடர்பில் நாளை மறுதினம் கலந்துரையாட இருக்கின்றது.

குறிப்பிட்ட பிரேரணையின் உள்ளடக்கம்தொடர்பாக கவனம் செலுத்தும் போது, எமது நாட்டுக்கு பாரிய சவாலான நிலைமை இருக்கின்றது. அதனால் நாங்கள் நாடு என்றவகையில் இது தொடர்பாக மிகவும் தீவிரமாக கவனம் செலுத்தவேண்டும். இதன்போது அரசாங்கம் மிகவும் புத்தியுடனும் முதிர்ச்சிமிக்க ராஜதந்திரமாகவும் நாட்டுக்காக முன்னின்று செயற்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு செயற்படாமல், இந்த பிரச்சினையை நாங்கள் மேலும் பிரச்சினையாக்கிக் கொண்டால், அதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஏதாவது தீர்மானத்துக்கு வந்தால், அதில் பாதிக்கப்படப்போவது நாட்டின் ஆட்சியாளர்களோ அரசியல்வாதிகளோ அல்ல. சாதாரண மக்களாகும்.

மேலும் நாட்டின் பொருளாதாரம் வரலாற்றில் எந்தவொரு காலத்திலும் காணமுடியாத அளவுக்கு அதல பாதாளத்துக்கு சென்று கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. சர்வதேச ரீதியில் எடுத்துக் கொண்டாலும் இன்று எமது நாடு, பல நட்பு நாடுகளை இழந்திருக்கின்றது. (நி-4)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மீண்டும் மைத்திரி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் செயலாளராக தயாசிறி ஜயசேகரவும் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்திலேயே மைத்திரிபால சிறிசேன மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோரை தலைவர் மற்றும் செயலாளராக நியமிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்கள் மூவரும் அதே பதவியில் அங்கம் வகிப்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர மற்றும் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ ஆகியோர் குறித்த பதவிக்கு மீண்டும் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் பொருளாளராக மீண்டும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு கட்சியின் தேசிய அமைப்பாளராக துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வெறி நோய் (Rabies)

ஒருத்தர் இருக்கின்றார். மிகவும் அமைதியான மனிதர். எப்பவும் மிகவும் மெதுவாகத்தான் நடப்பார். பஞ்சிலே காலை வைத்து நடக்கின்ற மாதிரி அவ்வளவு பக்குவமாக நடப்பார்.

எப்பொழுதும் சிரித்த முகம். அப்பேர்ப்பட்ட மனிதர் ஒருநாள் தலை தெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தார். வெளிறிப் போன முகம். விடயம் என்ன என்றால் ஒரு வெறி நாய் அவரைத் துரத்திக் கொண்டு வந்து கொண்டிருக்கு. வெறிநாய் என்றால் அவ்வளவு பயம்.

வெறிபிடித்த நாய் கடித்துவிட்டது என்றால் அது மிகவும் ஆபத்தான விடயம் தான். இருந்தாலும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால் தப்பித்துவிடலாம். இப்படி தலைதெறிக்க ஓடுவதும் ஒரு எச்சரிக்கையான நடவடிக்கை தான்.

இருந்தாலும் கடித்துவிட்டது என்று வையுங்கள். கடித்தது வெறி நாயா இல்லையா என்று எல்லாம் பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டாம்.உடனே டாக்டரிடம் போய் ஊசி போட்டுக் கொள்வது தான் நல்லது.

வெறி பிடித்த நாயாக இருந்தால் 10 நாளைக்கு மேலே அது உயிரோடு இருக்காது. அதை ஒரு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாலும் இன்னொரு பக்கம் டாக்டரையும் பார்க்க ஆரம்பித்துவிட வேண்டும்.

முன்னாடியெல்லாம் வயிற்றிலே தொப்புளைச் சுத்தி 14 ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இப்பொழுதெல்லாம் வெறும் ஆறு ஊசி... அதுவும் தோள்பட்டையில் போட்டுக் கொண்டால் போதும் அதைவிட சுலபமான மருந்துகூட வந்தாச்சு..

நாய், பூனை, மாடு, குதிரை, ஆடு, இது எல்லாவற்றுக்குமே வெறி பிடிக்கும். ஒரு வெறி பிடித்த பிராணி கடித்துவிட்டது அல்லது நகத்தாலே கீறிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே நாம் செய்ய வேண்டிய முதலுதவி என்ன தெரியுமா?

காயத்தைக் கழுவ வேண்டும்.நிறைய தண்ணீர் ஊற்றி சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும். அதற்குப்பின்பு ஏதாவது கிருமிநாசினி அல்லது ஸ்பிரிட் தடவ வேண்டும்.

இன்னொரு முக்கியமான விடயம் என்ன என்றால் காயத்துக்குக் கட்டுப்போடக் கூடாது. அதைத் திறந்தே வைக்க வேண்டும். உடனே டாக்டரிடம் போய்விட வேண்டும்.

வெறி நோய் என்பது விலங்குகள் மூலமாக மனிதர்களுக்குப் பரவக் கூடிய ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படுகின்ற நோய். 4000 வருடத்திற்கு முன்னாடியே மனிதன் இந்த நோயைப் பற்றி தெரிந்து வைத்திருக்கின்றான். ஆனால் நூறு வருடத்திற்கு முன்னாடி தான் இந்த நோயிடம் இருந்து தப்பிக்கின்ற வழி தெரிந்தது.

உகை வரலாற்றிலேயே அது ஒரு திருப்பு முனை. பிரான்ஸ் நாட்டிலே வேதியியல் வல்லுநர் ஒருத்தர் இருந்தார் லூயிபாஸ்டர்.

இவர் 1880 இலே வெறிநோய் ஆராய்ச்சியை ஆரம்பித்தார். 1885 இலே ஒரு தடுப்பூசி மருந்தை கண்டு பிடித்தார்.ஜோசப் மெய்ஸ்ட்டர் என்று ஒரு சின்ன பையன் அவனுக்குத் தான் முதல் தடவையாக தான் கண்டு பிடித்த தடுப்பூசியைப் போட்டார். வெறி நோயிலேயிருந்து அந்தப் பையனைக் காப்பாற்றிவிட்டார்.

அவரை கௌரவிக்கின்ற வகையில் அன்று முதல் வெறிநோய்த் தடுப்பூசிக்கு பாஸ்ட்டர் வெறிநோய்த் தடுப்பூசி என்று பெயர். பல பாஸ்ட்டர் நிறுவனங்கள் உலகம் பூராக உருவாகியது. நூற்றாண்டு விழா எல்லாம் கொண்டாடினார்கள்.

முதல் உலகப் போர் சமயத்திலே நாசிக் கூட்டத்தார் பாஸ்ட்டர் நிறுவனத்தை இடித்து தரை மட்டமாக்க முயற்சி செய்தார்கள். அப்பொழுது அங்கே வாயில் காப்பாளனாக இருந்த ஒரு வீரன்.. அந்த நிறுவனத்தைக் காப்பாற்றுகின்ற முயற்சியில் தன் உயிரைத் தியாகம் செய்தான். அந்தவீரன் யார் தெரியுமா?அவன் தான் முதலில் வெறி நோயிலிருந்து லூயிபாஸ்ட்டரால் காப்பாற்றப்பட்ட சிறுவன் ஜோசப் மெய்ஸ்ட்டர்.

மருந்து கண்டு பிடித்து நூறாண்டுகளைத் தாண்டியாச்சு.இப்பொழுது நவீனமான மருந்துகள் எல்லாம் வந்தாச்சு. இருந்தாலும் இன்னமும் கவனக்குறைவாலே உயிர் இழக்கிறவர்கள் அதிகம்.ஒருத்தன் ஓடி வந்தான். என்னை ஒரு வெறிநாய் கடித்துவிட்டது என்றான்.

சரி, அப்படி என்றால் அந்த நாயைக் கவனிக்க வேண்டும்.. உன்னைக் கடித்த நாய் எது என்று உன்னால் அடையாளம் காட்ட முடியுமா? என்று கேட்டார் டாக்டர்.


முடியும் என்றான். எப்படி? என்று கேட்டார்.

அந்த நாய் என்னைக் கடிக்கிறதற்கு முன்னாடி முன் ஜாக்கிரதையாக அதோடு காதை நான் கடித்துவிட்டேன். இதோ பையில் தான் வைத்திருக்கின்றேன் என்று சொல்லி எடுத்துக் காட்டினான்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

16

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**டிசெம்பர் 14 ஆம் திகதி**

டிசெம்பர் 14 ஆம் திகதி தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (electoral college) அனைவரும் எந்த மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அங்கு பதவியேற்க வேண்டும். அதன்பின் தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (electoral college) தங்கள் வாக்குச்சீட்டு மூலம் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி ஆகியோரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்த வாக்குகள் எண்ணப்பட்டு. தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் ஆறு "வாக்களிப்புச் சான்றிதழ்களில்" கையெழுத்திடுகிறார்கள். சான்றிதழ்கள், பிற உத்தியோகபூர்வ ஆவணங்களுடன், பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் செனட் சபையின் தலைவர் உட்பட பல்வேறு அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

**டிசெம்பர் 14 ஆம் திகதி தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் தங்கள் வாக்குச்சீட்டு மூலம் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி ஆகியோரைத் தேர்ந்தெடுப்பார்கள்.**

**டிசெம்பர் 23 ஆம் திகதி**

டிசெம்பர் 23 ஆம் திகதிக்குள் தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (electoral college) அளித்த ஆவணங்கள், சான்றிதழ்கள் அனைத்தும் அதிகாரிகளுக்கு கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும் அவ்வாறு சேராவிட்டால், அதற்குரிய மாற்றுச் சட்டங்கள் மூலம் முடிவு எடுக்கப்படும்.

**2021, ஜனவரி 6 ஆம் திகதி**

2021, ஜனவரி 6 ஆம் திகதி மதியம் ஒரு மணிக்கு அமெரிக்காவின் பிரதிநிதிகள் மற்றும் செனட் அவை (அமெரிக்கக் காங்கிரஸ்) கூட்டப்பட்டு தேர்வு செய்வோர் அவை பிரதிநிதிகளின் வாக்குகள் எண்ணப்படும். இதில் 270 பிரதிநிதிகள் வாக்குகளுக்கு அதற்கு அதிகமாகப் பெற்றவரே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்தத் தேர்தல் முடிவுகளை துணை ஜனாதிபதியாக இருக்கும் மைக் பென்ஸ் வெளியிடுவார்.

**2021, ஜனவரி 6 ஆம் திகதி மதியம் ஒரு மணிக்கு அமெரிக்காவின் பிரதிநிதிகள் மற்றும் செனட் அவை (அமெரிக்கக் காங்கிரஸ்) கூட்டப்பட்டு தேர்வு செய்வோர் அவை பிரதிநிகளின் வாக்குகள் எண்ணப்பட்டது. இதில் 306 தேர்வு செய்வோர் அவை பிரதிநிதிகள் வாக்குகளுக்கு பெற்ற ஜோ பிடன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் முடிவுகளை துணை ஜனாதிபதியாக இருந்த மைக் பென்ஸ் வெளியிட்டார்.**

தேர்தல் முடிவை துணை ஜனாதிபதி அறிவித்தபின் ஏதேனும் மாற்றுக் கருத்து இருந்தால் அதுகுறித்து உறுப்பினர்கள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம். இதில் பிரதிநிதிகள் சபையிலிருந்தும் செனட்டிலிருந்து குறைந்தபட்சம் தலா ஒருவர் எழுத்து மூலம் எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.

அந்த எதிர்ப்புக் கருத்துக் குறித்து இரு அவைகளும் தனித்தனியாக அதிகபட்சமாக 2 மணி நேரம் வரை விவாதிக்கும்.

அதன்பின், அந்த எதிர்ப்புக் கடிதத்தை ஏற்பதா? அல்லது நிராகரிப்பதா? என்று முடிவு செய்யும். அதன் பின் அந்த முடிவுகளை மீண்டும் கூட்டுக் கூட்டத்தில் அறிவிப்பார்கள். இரு அவைகளிலும் அந்த எதிர்ப்புக் கடிதம் ஏற்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது நிராகரிக்கப்படும். இத்தினத்தில் மிகப் பெரிய குழப்பம் நடைபெற்றது.

**ஜோ பிடனுக்கு வெற்றி சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்கப் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம்**

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பிடனுக்கு வெற்றி சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்க பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி நடைபெற்றது. அப்போது பாராளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இந்த வன்முறையில் பொலிஸ் அதிகாரி உட்பட 5 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரத்தைத் தொடர்ந்து அதிகாரத்தை கையில் எடுத்த துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தேசிய பாதுகாப்புப் படையினரை அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு பணியில் அமர்த்தினார்.

ஜனாதிபதி ட்ரம்பின் உத்தரவின்றி துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். மேலும், ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பிடன் வெற்றிபெற்றார் என்ற அறிவிப்பை பாராளுமன்றத்தில் பென்ஸ் உறுதிப்படுத்தினார். இது பற்றி விபரமாகப் பார்ப்போம்.

**ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பிடனுக்கு வெற்றி சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்க பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம் நடைபெற்ற போது பாராளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இந்த வன்முறையில் பொலிஸ் அதிகாரி உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.**

**6 ஆம் திகதி காலை முதல் மாலை வரை கப்பிட்டல் கட்டடத்தில் நீடித்த வன்முறை**

ஜனவரி 6 ஆம் திகதிக்கு சில வாரங்களுக்கு முன்புவரை, ஜனவரி 6 ஆம் திகதியை. திருப்பத்தை தரும் நாளாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறி வந்தார். தனது ஆதரவாளர்களை வோஷிங்டன் டி.சிக்கு வரும்படி கூறிய அவர், ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை நிராகரிக்குமாறு துணை ஜனாதிபதி மைக் பென்ஸையும் பாராளுமன்றத்தையும் வலியுறுத்துங்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

இந்த நிலையில், 6 ஆம் திகதி காலையில் தமது ஆதரவாளர்களை உற்சாகமூட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தயாரானார். ஜனாதிபதியின் தனி சட்டத்தரணி ரூடி கியுலியானி,




**பாராளுமன்றத்தில் பிரதிநிதிகள் அவைத் தலைவர் நான்சி பெலோசியின் அலுவலகத்தில் ட்ரம்ப் ஆதரவுக் கலகக்காரர் அவைத் தலைவரின் ஆசனத்தில்**

தேர்தல் மோதல்களை "யுத்த விசாரணை" மூலம் தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஜனாதிபதியின் மகனான ஜூனியர் ட்ரம்ப், தங்களுடைய ஜனாதிபதிக்காக அவரது கட்சியினர் போராடவில்லை என்ற செய்தியை ட்ரம்பின் ஆதரவாளர்களுக்கு அளித்தார்.

"இது இனி குடியரசு கட்சி அல்ல" என்று குறிப்பிட்ட அவர், "இது டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சி," என்று தெரிவித்தார். இதேவேளை ஜனாதிபதி ட்ரம்ப் தானே தோன்றி திரளாகக் கூடியிருந்த தமது ஆதரவாளர்களை ஊக்கப்படுத்தினார். அவர்கள், "தேர்தல் முடிவு திருட்டை நிறுத்துங்கள்" என்று கோஷமிட்டனர். வெள்ளை மாளிகையில் இருந்து பாராளுமன்றம் உள்ள கப்பிடல் கட்டடம் வரை அவர்கள் நடந்து சென்று குரல் கொடுக்க ட்ரம்பின் வார்த்தைகள் உற்சாகம் கொடுத்தன.

"நாங்கள் ஒருபோதும் கைவிட மாட்டோம், ஒருபோதும் முடிவை ஒப்புக் கொள்ள மாட்டோம்" என்று ஜனாதிபதி கூட்டத்தினரிடையே பேசினார். "நமது நாடு போதுமான அளவுக்கு அனுபவித்து விட்டது. மேலும் அது அனுபவிக்க விடமாட்டோம்" என்று ட்ரம்ப் குறிப்பிட்டார்.

அவர் வெள்ளை மாளிகையில் உரையாற்றிக் கொண்டிருந்த அதே சமயம், கப்பிட்டல் கட்டடத்துக்கு வெளியே வேறு விதமான நிகழ்வு நடந்து கொண்டிருந்தது. அமெரிக்க காங்கிரஸ் எனப்படும் அந்நாட்டு பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் தேர்தலில் பதிவான மாகாண வாரியான முடிவுகளை அட்டவணைப்படுத்தும் அலுவல் தொடங்கியது.

முதலாவதாக, தேர்தல் முடிவுகளை நிராகரிக்குமாறு ஜனாதிபதி ட்ரம்ப் துணை ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கையையும் மீறி, பாராளுமன்ற அலுவலை தொடங்கிய துணை ஜனாதிபதி, தனக்கு அத்தகைய அதிகாரங்கள் இல்லை என்றும் தனது பங்களிப்பு "பெரும்பாலும் சடங்கு மட்டுமே" என்றும் குறிப்பிடும் அறிக்கையை வெளியிட்டார்.

(தொடரும்...)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிராகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றிருந்தது.

இதன்போதே குறித்த அறிக்கையினை நிராகரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுவின் யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி ஊடாக ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரம் சில சந்தர்ப்பங்களில் அத்துமீறி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தின் போது குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# மக்கள் எதிர்பார்த்த அறிக்கை இதுவல்ல - மகிந்த அமரவீர

(கொழும்பு)

மக்கள் எதிர்பார்த்த அறிக்கை இதுவல்ல, அறிக்கை தொடர்பில் எமக்குள் முரண்பாடுகள் பல உள்ளன என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவிடமிருந்து மக்கள் எதிர்பார்த்தது இவ்வாறான அறிக்கை இல்லை.

சஹ்ரானை வழிநடத்தியவர் யார், என்ற சந்தேகம் எமக்கிருந்தாலும் அதற்கான பதில் இவ்வறிக்கையில் இல்லை. இந்தத் தாக்குதலுக்கு உதவி செய்த அரசியல்வாதிகள் அல்லது வேறு குழுவினர் அல்லது இதில் சர்வதேசத்தின் தலையீடு உள்ளதா என்ற சந்தேகம், பொதுமக்களுக்கு இருந்தாலும் அது தொடர்பான எவ்வித தகவல்களும் ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி, இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்களுடன் எம்மால் இணங்க முடியாதுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# பௌத்த மதத்தின் முன்னுரிமையை இரத்துச் செய்ய பரிந்துரைக்கிறதா?

## ரணில்

(கொழும்பு)


ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில், புதிதாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்த உண்மை கருத்துகளை வெளியிடாத ஜனாதிபதி ஆணைக்குழு, 'ஒரு நாடு, ஒரு சட்டம்' எனப் பரிந்துரைகளைக் கொண்டு, அரசியல் கட்சி கொள்கை அளவில், வெறும் ஆவணத்தை மாத்திரமே முன்வைத்துள்ளது.

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பதை அமுல்படுத்துவதன் மூலம், அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இரத்துச் செய்ய, ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைக்கிறதா என்ற கேள்வி எழுகின்றது என ரணில் தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## ஆத்ம திருப்தி தரும் 6 கால பூஜை வழிபாடு

ஆலயங்களில் செய்யப்படும் பூஜைகள் தொடர்பாக ஆகமங்களில் நிறையச் சொல்லப்பட்டுள்ளன. பூஜையைப் பொறுத்தவரை சைவ ஆகம விதிகளிலும் வைணவ ஆகம விதிகளிலும் சிறு சிறு வித்தியாசங்களையே பார்க்க முடியும்.

எனவே இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைகள் பெரும்பாலும் ஆகமங்களில் ஒன்று போலவே உள்ளன. அந்த வகையில் வழிபாடு என்பது ஆத்மார்த்த வழிபாடு, பரார்த்த வழிபாடு என்று இரண்டு வகைப்படும்.

இதில் ஆத்மார்த்த வழிபாடு என்பது நாம் நமது வீட்டில் சாமி கும்பிடுவதைக் குறிப்பதாகும். ஆத்மார்த்த வழிபாட்டை நாம் நமது வசதிக்கு ஏற்ப அதே சமயத்தில் இறைவனைப் பூஜிப்பதில் எந்தக் குறையும் வைக்காமல் வீட்டில் யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்று காரணாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆத்மார்த்த வழிபாட்டைச் செய்த பிறகே ஒவ்வொருவரும் பரார்த்த வழிபாட்டுக்குச் செல்ல வேண்டும். பரார்த்த வழிபாடு என்பது தனக்காக, தம் குடும்பத்தினருக்காக மட்டுமன்றி உற்றார், உறவினர் என மற்றவர்களுக்காகவும் செய்யப்படும் வழிபாடாகும்.

பரார்த்த வழிபாடு மூன்று வகைப்படும்.

1.நித்ய வழிபாடு
2.நைமித்திய வழிபாடு
3.காமியம் வழிபாடு

### நித்ய வழிபாடு

ஒரு ஆலயத்தில் காலையில் தொடங்கி இரவு வரை நடத்தப்படும் வழிபாட்டுக்கு நித்ய வழிபாடு என்று பெயர்.

நமது முன்னோர்கள் உஷத் காலம், பிராதக் காலம், காலமத்யசந்தி திவித்ய காலசந்தி, மத்ய சந்தி, மத்தியானம், சாயங்காலம், ராத்திரி சந்தி, அர்த்த ஜாமம், பூத ராத்திரி, காலராத்திரி, மகாநிசி என்ற 12 கால பூஜைகளை நடத்தினார்கள்.

அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து தற்போது பெரும்பாலான ஆலயங்களில் 6 கால பூஜையே நடத்தப்படுகிறது.

சிவத் தலங்களில் உஷத் காலம், காலை சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம், பள்ளியறை பூஜை என்ற 6 காலப் பூஜை நடைமுறையில் உள்ளது.

வைணவத் தலங்களில் விஷ்வரூப வழிபாடு, காலை சந்தி, பரிவாரக் கோவில் வழிபாடு, உச்சிக்காலம், சாயரட்சை, பரிவாரக் கோவில், அர்த்த ஜாமம் என்று காலப் பூஜைகள் செய்யப்படுகின்றன. இந்த 6 காலப் பூஜைகளைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

### 1.உஷத் காலம்

பள்ளியறையில் இருக்கும் இறைவனைப் பள்ளியெழுச்சி எழச்செய்வதற்கான பூஜை உஷத் காலப் பூஜையாகும். பள்ளியறையில் இருக்கும் இறைவனைப் பாடி எழ வைப்பார்கள்.

பிறகு அவரைப் பள்ளியறையில் இருந்து கருவறைக்கு அழைத்து வருவார்கள்.

சைவக் கோவில்களில் இறைவனின் திருப்பாதத்தை இதற்கென வைத்திருப்பார்கள்.

அதைப் பள்ளியறையில் இருந்து கருவறைக்கு எடுத்து வருவார்கள். வைணவத் தலங்களில் சயனபேரம் எனப்படும் இறை உருவம் இதற்கெனப் பயன்படுத்தப்படும்.

அதைக் கருவறைக்கு எடுத்து வருவார்கள். தினமும் அதிகாலை 5 மணிக்கு இந்த உஷக் காலப் பூஜை தொடங்கி நடத்தப்படும். சூரியன் உதிப்பதற்கு முன்பு இந்தப் பூஜை நடத்தி முடிக்கப்பட்டு விடும்.

(தொடரும்)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 350 | 400 |
| தக்காளி | 250 | 240 | 140 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 120 |
| கரட் | 160 | 190 | 180 | 240 |
| பூசணி | 80 | 120 | 80 | 50 |
| புடோல் | 160 | 180 | -- | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 250-350 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 120 | 140 |
| பாகற்காய் | 180 | 160 | 220 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 120 | 140 | 160 |
| லீக்ஸ் | 160 | 130 | 130 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 250 | 300 | 240 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 100 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 140 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | -- | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60 | 80-110 |
| இராசவள்ளி | 250 | 230 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 130 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 50 |
| வல்லாரை | 40 | 130 | 20-30 | 30 |
| ஈரப்பலா | 140 | 100 | -- | 100 |

# மக்கள் குடியிருப்பில் தொலைத் தொடர்பு கோபுரம் இதுவரை தடுத்து நிறுத்தப்படவில்லை

(நெளுக்குளம்)

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தனியார் தொலைத் தொடர்புக் கோபுரம் அப்பகுதியில் உள்ள 'மக்களுக்கு அச்சுறுத்தலாகவும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுவதாக தெரிவித்து கோபுரம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



இதையடுத்து நகரசபையினால் தொலைத் தொடர்புக்கோபுரம் அமைக்கும் பணிக்கு தடை அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை முதல்கோபுரம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில் ,

எமது பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தொலைத் தொடர்பு கோபுரம் பாதுகாப்பு அற்றதுடன் அச்சுறுத்தலாகவும் காணப்படுவதாக நகரசபையினருக்கு அறிவிக்கப்பட்டது.

எனினும் அந் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தமக்கு தெரிவிக்கப்பட்டபோதிலும் இன்று வரை தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் பணிகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என தெரிவித்தனர்.

மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு முயன்றபோதிலும் கொரோனாவைக்காரணம் காட்டி பொலிஸாரின் தலையீட்டால் மக்களின் ஆர்ப்பாட்டமும் தடுக்கப்பட்டுள்ளது.

மக்கள்குடியிருப்புப்பகுதியினுள் இக்கோபுரம் அமைப்பதைத் தடை செய்யுமாறு கோருவதாகவும் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தனர்.

(5-4-299)

# விசேட சுற்றிவளைப்பு கஞ்சாவுடன் ஐவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றிவளைப்பில் கஞ்சா பொதிகளுடன் நடமாடிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் உடைமையிலிருந்து 874 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-299)





கீரிமலை ஸ்ரீமகாமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் :-ரவிசாந்)



வவுனியா தாதியர் கல்லூரி தாதியர்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நேற்று கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. (படம்:-வசந்தரூபன்)

# தமிழில் கையொப்பம் இடுவோம் தாய்மொழி தினத்தில் உறுதி

(கொழும்பு)


"உலகத் தாய்மொழி தினம் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி என ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

ஓரினத்தின் தாய்மொழி ஆறுநிலைகளில் பயன்பட வேண்டும். அவை ஆட்சித்துறை, நீதித்துறை , கல்வித்துறை, இறையியற்றுறை, பொருளியற்றுறை, குமுகாய (சமுதாய)த்துறை என்பன தாய்மொழியில் இந்த ஆறு துறைகளில் முழுமையாகவும் செம்மையாகவும் பயன்படவில்லை என்றால் அந்த மொழி தனது இறுதிக்கட்டத்தை நோக்கி மெல்ல நகர்ந்துகொண்டு இருக்கிறது என்பதை நுண்மான் நுழைபுலத்தினர் திண்ணமாக உணர்ந்து கொள்வார்கள்.

கிளி. மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் உலகத் தாய்மொழி தினம் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தின் பல பாடசாலைகளில் தமிழின் சிறப்புப் பற்றியும், தமிழைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றியும் மாணவர்களுக்கு ஆசிரியர்களால் எடுத்துக் கூறப்பட்டது.

இதனையடுத்து மாணவர்கள்தமிழில் கையொப்பம் இடுவோம், தமிழைப் பாதுகாப்போம் எனக்கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (5,4,6)

# தொடரும் யானைகளின் தொல்லை கவனிப்பாரற்ற அம்பலப்பெருமாள் குளம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் புகுந்த யானைகள் தென்னை மரங்களை அழித்துள்ளன.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் புகுந்த யானைகள் தென்னை மரங்களை அழித்துள்ளன.

கோட்டைகட்டியகுளம் காட்டுப் பகுதி ஊடாக குறித்த கிராமத்திற்குள் புகுந்து யானைகள் தென்னை மரங்களை அழித்துள்ளன.

சம்பவ இடத்திற்குச் சென்ற கிராம உத்தியோகத்தர் அழிவு விபரங்களைத் திரட்டியுள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் யானைகளின் தொல்லையினை எதிர்கொள்ளும் கிராமங்களில் ஒன்றாக அம்பலப்பெருமாள் குளம் காணப்படுகிறது.

காலபோக பயிர்ச் செய்கை, சிறுபோக நெற்செய் கைகளை யானைகள் தொடர்ச்சியாக அழித்து வருகின்றன.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் யானைகளினைக் கட்டுப்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுமாறு தொடர்ந்து அம்பலப்பெருமாள்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கடந்த பெருமழையின் போது குளத்தில் நீர் நிரம்பி இருந்த போதும் குளத்தினால் நீந்தி வந்த யானைகள் அம்பலப்பெருமாள் குளத்தின் அணைக்கட்டிற்கும் சேதம் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அம்பலப்பெருமாள் குளத்தின் மக்கள் குடியேறி உள்ள மேட்டுக் காணிகளிலும் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது. (5-4-350)

உண்மையான சந்தோசம் எதில் இருப்பதாக நினைக்கிறீர்கள்? நேர்மையான நாணயமான வாழ்க்கையில்! *~ நடிகர் ரஜினி காந்த்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அநீதி வெல்வதற்கு ஆதரவு கொடுத்தால்...

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்; இலங்கையில் கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழலாம் எனவும் எச்சரிக்கைப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, உங்கள் மகனை அல்லது கணவரை இழப்பது குறித்து சிந்தித்துப் பாருங்கள் என அமெரிக்கத் தூதுவர் இலங்கை அரசாங்கத்திடம் கூறியுள்ளார்.

ஆக, இலங்கையில் தமிழ் மக்களுக்கு நடந்தேறிய ஈனச் செயல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். போர்க்குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

இருந்தும் ஐ.நா மனித உரிமை பேரவையில் இடம்பெறக்கூடிய வாக்களிக்கும் உரிமை கொண்ட நாடுகள், இலங்கை விடயத்தில் வெவ்வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளமை தெரியவருகிறது.

அதாவது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கக்கூடிய நாடுகள் ஒருபுறமிருக்க, மேற்குறித்த தீர்மானத்தை எதிர்ப்பதற்கும் அது விடயத்தில் நடுநிலை வகிப்பதற்கும் சில நாடுகள் முற்பட்டுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்குதான் மேற்குறித்த நாடுகள் ஒரு முக்கியமான விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அதாவது போர் முடிவடைந்து 12 ஆண்டுகள் கடந்தபோதிலும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்பதை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, இலங்கையில் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த மனித உரிமை மீறல்கள் மீண்டும் அங்கு நடக்கக்கூடியதான சந்தர்ப்பம் உண்டென்பதும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் கணிப்பு.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றுகின்ற நோக்கில் செயற்படக்கூடிய நாடுகளும் நடுநிலை வகிக்கும் நாடுகளும் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதை தடை செய்கின்றன என்றே கூறவேண்டும்.

இதற்கு மேலாக; குறித்த நாடுகளின் செயலானது, இலங்கையில் எதிர்காலத்திலும் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திவிடப் போகின்றன.

எனவே இது விடயத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் நடுநிலையாகவும் வாக்களிப்பதென முடிவு செய்த நாடுகள் ஒரு கணம் நின்று நிதானமாகச் சிந்தித்தாக வேண்டும்.

ஆம், காலாகாலமாக இலங்கைத் தமிழ் மக்கள் சிறுபான்மையினம் என்பதால் பேரினவாதத்தின் தீக்கு இரையாகின்றனர்.

இந்தக் கொடுமை நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களும் சம உரிமையோடு வாழ வேண்டும். இதற்கு வகை செய்வதுதான் உலக நாடுகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

இதிலிருந்து அந்த நாடுகள் விலகுமாயின், இலங்கையில் மீண்டும் தமிழ் மக்கள் வஞ்சிக்கப்படுவர் என்பது நிறுதிட்டமான உண்மை.

# எங்களுடைய பிள்ளைகளை காட்டினாலே நாம் ஜனாதிபதி கோட்டாவுடன் பேசுவோம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(நெளுக்குளம்)

துண்டுப்பிரசுரம் ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அருகில் இருந்த நான்கு தமிழ்ச் சிறுமிகளை எங்களுக்குக் காட்டினால் ஜனாதிபதி கோட்டாபயவுடன் பேசுவது தொடர்பாக சிந்திப்போம் என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வெளி வந்துள்ள தகவல் தொடர்பாக நேற்று பதிலளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ் வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், குறைந்த பட்சம் கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கை அரசாங்கத்துடன் பேசி ஏமாற்றமடைந்த வரலாறு எங்களுக்கு இருக்கிறது. கடைசியாக 2017ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்துடன் அலரி மாளிகையில் சந்திப்பு நடைபெற்றது. அப்போதும் நாங்கள் ஏமாற்றப்பட்டோம்.

எமது பிள்ளைகளை இராணுவம் அழைத்துச் சென்றதுதான் உண்மை. எனவே எமது பிள்ளைகளை அழைத்துச்சென்ற இராணுவம் விசாரிக்கப்பட வேண்டும். இலங்கையுடன் புதிய அரசியலமைப்பு பற்றி பேச வேண்டாம் என்று தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்க விரும்புகிறோம்.

கனடா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த வல்லுநர்கள் இங்கு வந்து தமிழர்களை ஒடுக்குமுறையிலிருந்து பாதுகாக்கக் கூடிய அரசியலமைப்பு எது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். என்றனர். (நி-299)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு

## தலா 55 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கரணவாய்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 55 ஆயிரம் ரூபாய் அபராதமும் 12 மாத காலம் சாரதி அனுமதிப்பத்திரத்தை நிறுத்தி வைக்கவும் பருத்தித்துறை நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட கரணவாய் மற்றும் கரவெட்டிப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் இருவரும் ஏற்கெனவே மதுபோதையில் வாகனம் செலுத்தி குற்றவாளிகளாக காணப்பட்டமையினை பொலிஸார் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து இருவருக்கும் தலா 55 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் 12 மாத காலம் சாரதி அனுமதிப் பத்திரத்தை நிறுத்தி வைக்கவும் மன்று கட்டளையிட்டது. (ம-3,60)

# இலங்கைக்கு இது முக்கியமான வாரம்

## கரு ஜெயசூரிய

(கொழும்பு)

வெளிவிவகார உறவுகளைப் பொறுத்தவரையில், இது இலங்கைக்கு மிகமுக்கிய மான வாரமாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் வெளிவிவகார உறவுகளைப் பொறுத்தவரை, இது மிகவும் முக்கியமான வாரமாகும்.

ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்வது குறித்த பேச்சுவார்த்தைகளின்போது நாட்டின் இறையாண்மையை சமரசத்திற்கு உட்படுத்த முடியாது.

எனினும் கௌரவமான நாடொன்றின் பொறுப்புவாய்ந்த பிரஜைகள் என்ற அடிப்படையில் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதிலும் தண்டனைகளிலிருந்து விலகுவதை முடிவிற்குக் கொண்டு வருவதிலும் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு ரூ.6 ஆயிரம் அபராதம்

(கரணவாய்)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை கடும் எச்சரிக்கை செய்ததுடன் 6 ஆயிரம்ரூபாய்அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

800 மில்லி கிராம் கேரளா கஞ்சாவுடன் நெல்லியடி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரை பொலிஸார் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதன்போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிமன்றத்தால் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் 6 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.(ம-3,60)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## பிரதிபலன் எதிர்பாராதே

❖ நமது உள்ளங்களை திறந்து வைத்திருந்தால், உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.

❖ கடவுளை நம் தந்தையாக ஒப்புக் கொண்டு விட்டதால், நம்முடன் வாழ்பவர்களை சகோதரர்களாக அங்கீகரிக்க வேண்டும். அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

❖ பணிவுக்கும், மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் பல நன்மைகளைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கும் வரை உண்மையான பக்தி உண்டாகாது.

❖ மனிதன் பிறந்தது இயற்கையை வெல்வதற்காகத் தான். அதற்குப் பணிந்து போவதற்கல்ல.

❖ சக்தி என்பது நன்மை, தீமை என்னும் இருவழிகளில் வெளிப்படுகிறது. கடவுளும், தீயவனான அரக்கனும் எதிரெதிர் நீரோட்டம் உள்ள ஒரே ஆறுதான். நல்ல வழியில் சக்தியை செலவழிப்பதே உத்தமம்.

❖ இல்லறம் நடத்துபவனுக்கும், துறவறம் பூண்டவனுக்கும் இடையில் உயர்வு தாழ்வு இல்லை. அவரவர் நிலையில் அவரவர் சிறந்தவர்கள்.

❖ பக்தியில் ஈடுபடும் போது கடவுளைத் தனியாகவும், நம்மை வேறாகவும் பிரித்துப் பார்க்க வேண்டும்.

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–302

# பறவைக் காய்ச்சல் - அவதானம் தேவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வைரசுக் காய்ச்சலினால் உலகம் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருப்பதனை கொரோனாவின் தாக்கத்திலிருந்து அனைவரும் புரிந்து கொள்ளலாம். இது வெறுமனே வைரசுக்காய்ச்சல் என்றால் அது நலிவுற்றவரை அதிகம் பாதிக்கும் எனக் காணலாம். ஆனாலும் இவ்வாறான வைரசுக் காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணங்களாக பலவற்றை பட்டியலிட்டாலும் டெங்கு, எலிக்காய்ச்சல் என இவற்றையும் தாண்டி பறவைக் காய்ச்சல் அனைவரையும் பயப்பீதியடைய வைப்பதான செய்திகள் வருகின்றன. மனிதர்களைத் தாக்கும் வைரசுக்கள் தொடர்பில் நாம் மிகவும்கவனமாகவும்அதனை முன்கூட்டியே எதிர்கொள்ளும் திராணியுடையவர்களாகவும் இருக்க வேண்டும். உலக உணவு தாபனம் பறவைக் காய்ச்சலின் தன்மை பற்றி தனது இணையத்தளத்தில் உலக மக்களுக்கு அறிவுறுத்தியிருக்கின்றது. இதில் மக்களை முன்கூட்டியே தயார்ப்படுத்தும் நோக்கத்தோடு பறவைக்காய்ச்சல் பற்றிய விடயங்களை தெரியப்படுத்துவதனால் மக்களாகவே தம்மை இவ்வாறாக நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் குறிப்பாக தற்பாதுகாத்துக் கொள்வது இலகுவாக இருக்கும்.

பறவைக் காய்ச்சல் குறிப்பாக வௌவால்கள் மற்றும் நீண்டதூரம் பறக்கும் பறவைகளின் மூலம் ஒரு நாட்டிலிருந்து பிறநாடுகளுக்கு தொற்றுகின்றது. இவை தவிர நாம் வளர்க்கும் பறவைகளிலும் இவ்வாறான தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. "வருமுன் காத்தல் **(Prevention is better than curation)**" என்னும் தொனிப்பொருளில் பொதிந்திருக்கும் அர்த்தம் அதுதானே!. கிட்டத்தட்ட ஒரு வருடகாலம் நோய்த்தடுப்பு பற்றியே அனைவரும் பேசிக்கொண்டிருக்கும் போது தற்போது பறவைக் காய்ச்சல் பற்றிய செய்தி வெளிவந்திருக்கின்றது. உலகத்தில் குறிப்பிட்ட நோய்களினால் பாதிப்புக்கள் மனிதனில் ஏற்பட்டதற்கான முக்கிய காரணியாக பறவைகள் மூலமாக பரவும் வைரசு நோய்கள் இருக்கின்றன. ஆனால் இம்முறை வெளிப்படுகின்ற வைரசு அதீத வீரியத்தைக் கொண்டிருப்பதாகத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கொரோனா வைரசு திரிபடைவது போல பறவைக் காய்ச்சல் வைரசும் அதீத வீரியத்தைக் கொண்டு பரவ ஆரம்பித்திருப்பதனால் இது பற்றிய விழிப்புணர்வு அவசியம் மக்களிடையே ஏற்படுத்தப்படல் வேண்டும்.

கொரோனா வைரசு நீண்ட தூரம் வளிமூலம் பரவுவதற்கான சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவு. நோய்த்தொற்றுள்ள தேசத்திலிருந்து எமது நாட்டுக்கு பயணிப்பவர்கள் மூலமாக மட்டுமே இவ்வைரசு பரவ ஆரம்பிக்கின்றது. ஆனால் பறவைக் காய்ச்சல் வைரசு இன்னும் ஒரு படி மேலே போய் வெளிநாடுகளிலிருந்து எமது நாட்டுக்கு வரும் பறவைகள் மூலம்பறவைக்காய்ச்சல்வைரசு காவப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகவே இருக்கின்றன. அவ்வாறு காவப்படுமாயின் எம்மால் இந்நாட்டுக்குள் வருகைதரும் பறவைகளைக் கட்டுப்படுத்தாமல் போவதனால் பறவைக்காய்ச்சல் வைரசு எமது நாட்டில் வளர்க்கப்படுகின்ற பறவைகளிலும் குறிப்பாக உணவுக்காக வளர்க்கப்படும் கோழி, காடை போன்றவற்றில் இலகுவாக தொற்றுதலுக்குள்ளாகிவிடும். இந்த இடரிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்வது மிகவும் சிரமமானதாக இருக்கப்போகின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 315




1981 ஆம் வருடத்தில் ஸ்பானிஸ் புளூ: **Spanish flu** எனப்படும் நோய் தான் முதலாக அறியப்பட்ட பறவைக் காய்ச்சல் வைரசு நோய் இதனை **A(H1N1)** என இனங்காணப்பட்ட வைரசு தோற்றுகின்றது என கண்டறிந்தார்கள். இந்த வைரசு ஏறக்குறைய 500 மில்லியன் மக்களில் தொற்றுதலுக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் இதுவரையிலும் இந்த நோய் மனிதனிலிருந்து மனிதனுக்கு தொற்றியதாக தகவல் இல்லை. அதிலும் இருவைரசுக்களான **H5N6** மற்றும் **H9N2** ஆகியவை பறவைகளை வளர்க்கும் பண்ணையுடன் மிகத்தொடர்பில் இருந்தவருக்கு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பறவைக் காய்ச்சல் வைரசுக்கள் ஆர்.என்.ஏ. **(RNA)** இனால் ஆனவையாகும். ஆதலினால் அவை விரைந்து திரிபடையக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. இதற்காக உலக உணவு மற்றும் விவசாய தாபனம், உலக கால்நடைகள் சுகாதார நிறுவனம் மற்றும் உலக சுகாதார தாபனம் ஆகியன இணைந்து கூட்டாக செயற்றிட்டங்களை வடிவமைத்து நெறிப்படுத்தி வருகின்றன.

ஆசியாவில் 1996 ஆம் ஆண்டில் தான் பறவைக் காய்ச்சல் பரவ ஆரம்பித்தது. அதிலிருந்து கண்டம் விட்டு கண்டம் பறக்கும் பறவைகளினூடாக இந்த வைரசு பரவுவதற்கான வாய்ப்புக்கள் மிக மிக அதிகம். அந்தவகையில் இப்பறவைகளின் நடமாட்டத்தினை கண்காணித்து அதன் மூலமாக வெளிநாட்டிலிருந்து வரும் பறவைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதோடு அவற்றின் செயற்பாட்டினையும் முறையாக நுணுக்கமாக ஆராய வேண்டி வந்திருக்கின்றது.

இந்த வைரசுக்களை பாகுபாட்டியலில் ஹீமாஅக்குளூற்றினின் **(Haemagglutinin-H)** மற்றும் நியூறமினிடேசு **(N)** பரம்பரையலகுகளின் கலவைகளினாலான வைரசுக்களாகும். தற்போது 18 ஹீமாஅக்குளூற்றினின் வகைகளும் 11 நியூறமினிடேசு உபவகைகளும் இயற்கையாக காணப்படுகின்றனவாம். இவற்றின் கலவைகள் அந்தந்த தருணத்திற்கேற்ப உருவாக்கப்படுகின்றன என்பதுதான் நம்மை வியக்கவைக்கும் செய்தியாகும்.

இவ்வாறாக தற்போது **H5Nx, H7Nx,** மற்றும் **H9Nx** உபவகைகள் ஆராய்ச்சியாளர்களினால் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனவாகும். அவற்றுள் **H5N1, H5N6, H7N9, H9N2** என்பன அதிமுக்கியமான உபவகைகளாகும்.

தற்போது பல பறவைக் காய்ச்சல் வைரசுக்களின் பரவல் அவ்வப்போது அறிவிக்கப்பட்டாலும் இவை இலகுவில் திரிபடைந்து இன்னும் மற்றைய பறவைக்காய்ச்சல் வைரசுவுடன் இணைந்த புதிய வைரசுக்களை உருவாக்கும் திறன்களையும் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு பெருகுவது மிகப் பெரிய ஆபத்தினை எமக்குத் தரப்போகின்றன என்பதனை கட்டியங்கூறுவதாகவே இருக்கின்றது. இதனை நாம் வெறுமனே அலட்சியம் செய்யக் கூடாது. 2020 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் உலக உணவு மற்றும் விவசாய தாபனம் உலக கால்நடைகள் சுகாதார நிறுவனத்தை அறிவுறுத்தியமையும் இவ்வைரசுக்களின் விளைவுளை தெரியப்படுத்தியிருந்தார்கள். இதில் மிகவும் அபாயகரமான **HPAI** வைரசுவாக **H5N8** அமைந்திருக்கின்றது.

கொரோனா காலத்தில் பறவைக்காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உலக உணவு மற்றும் விவசாய தாபனம் உலகமக்களை அறிவுறுத்தியிருக்கின்றது.

குறிப்பாக வெளிநாட்டு பறவைகளின் வருகை, அவற்றை அவசியம் கண்காணிப்பதற்கான பொறிமுறை, யாரேனும் நோயுற்றிருந்தால் அவரை உடனடியாக பரிசோதித்து காரணத்தை கண்டறிதல், அவசியமற்ற பறவைகளுடனான தொடர்பு குறிப்பாக கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் எமது சூழற்றொகுதியிலுள்ள பறவைகள் அனைத்தையும் அவசியம் கண்காணிக்க வேண்டும்.

குறிப்பாக பறவைகள் இறந்திருந்தால் உடனடியாக வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சுக்கும் கால்நடைகள் அபிவிருத்தி மற்றும் சுகாதார அமைச்சுக்கும் இன்னும் சுகாதார அமைச்சுக்கும் அறிவித்து அதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும்.

இதனை சமூகப்பொறுப்பு கருதி மக்களனைவரும் செய்தால் இவ்வாறான பறவைக் காய்ச்சல் இடரிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றலாம்.

தடுப்பூசி பறவைக்காய்ச்சலுக்கு பொருந்துமா என்றால் நிச்சயமாக ஆனால் சீனாவில் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பரில் அங்குள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட பறவைக்காய்ச்சல் இன்புளுவன்சா வைரசுவிற்கான தடுப்பூசி மக்களை **H7N9** பறவைக் காய்ச்சல் வைரசுவிலிருந்து காப்பாற்றியிருக்கின்றது என்னும் மகிழ்ச்சியான செய்தியிருப்பினும் இவ்வாறு வரும் புதிய வைரசுக்களுக்கு நாம் தொடர்ந்து தடுப்பூசிகளை ஏற்றவேண்டுமாயின் இது எங்குபோய் நிற்குமென்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே அமையும்.

எதனையும் எமது மனோதைரியத்தாலும் நல்லமுறையான இயற்கையுடனான வாழ்க்கை முறைக்கும் எம்மை உட்படுத்திக் கொண்டால் எமக்கான நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைவரையும் காப்பாற்றிக்கொள்வோம்.

## கொரோனா...

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 464 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் +497 தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

## தாதியை பலி...

இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கண்டி தாதியர் பயிற்சிக் கல்லூரியில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த குறித்த தாதி, 2001ஆம் ஆண்டு முதல் மாவனெல்லை ஆதார வைத்தியசாலையில் தாதியாகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் உயிரிழந்த முதலாவது தாதி இவராவார் என அரச தாதியர் சங்கம் அறிவித்துள்ளது. (ம-3)

## வடக்கில் 7 பேரு...

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 430 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் வடமாகாணத்தில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. மேற்படி தகவலை யாழ். போதனா வைத்தியசாலை வழங்கியுள் ளது.

இதன்படி யாழ்.சிறைச்சாலையில் 6 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. (ம-3,18,33)

## இலங்கையின்...

இதனை அறிவித்தார்.

அவர் ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது,

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் உள்ளடக்கங்கள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இனப் பதற்றங்களைத் தடுக்கவும், தேசிய ஒற்றுமையை நிலைநாட்டவும் இலங்கை ஒரு நியாயமான திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று சீனா எதிர்பார்க்கிறது.

அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அரசியல் சுதந்திரத்தையும் மதிக்க வேண்டியதன் அவசியத்தையும் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதையும் அரசியல் செல்வாக்கை செலுத்துவதையும் கைவிட வேண்டும் என்பதை சீன வலியுறுத்துகின்றது என்றார். (ம-3)

## மின்சாரம் தாக்கி...

10.30 மணியளவில் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சதிஸ்வரன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார்.

நாய்க்கூடு ஒன்றை வாகனத்தில் ஏற்ற முற்பட்ட வேளையில் மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் தாக்கிய நபரை உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிகிச்சை பலனளிக்காது அவர் உயிரிழந்துள்ளார்.

(ம-3,100,316)

## விபத்துக்குள்...

திரும்பிய முதியவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இதில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்லப்பா சண்முகலிங்கம் (வயது-80) என்பரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் கடந்த 18ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு துவிச்சக்கரவண்டியில் சென்று மருந்து எடுத்துக் கொண்டு வீடு திரும்பும்போது கே.கே.எஸ் வீதி, சிவலிங்கப்புளியடியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த முதியவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## இலங்கைத்...

வெளியிட்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரண்டு தரப்பினரும் மேற்கொண்ட யுத்தக் குற்றங்களுக்கு இன்னும் பொறுப்புக் கூறப்படவில்லை.

இந்த நிலையில் மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் பரிந்துரைத்தபடி, இலங்கையை மாற்று சர்வதேச பொறிமுறைக்கு பாரப்படுத்த, மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (ம-3)

## விரைவில்...

கட்டமைப்பு உருவாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய தமிழ் கட்சிகள், வடக்கு - கிழக்கில் இருக்கக்கூடிய கிறிஸ்தவ ஆயர்கள், ஆதீன முதல்வர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் ஒன்றிணைந்த கலந்துரையாடல் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

இதன்பின்னர், இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன்,

"இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் ஒற்றுமை இன்றியமையாதது என்ற கருத்தை நாங்கள் எல்லோருமே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதனை மதத் தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

அந்த அரசியல் ஒற்றுமையை எவ்வாறு வேகமாகவும், தீவிரமாகவும் நகர்த்துவது என்பது பற்றி ஒவ்வொரு கட்சிகளும் தமது தீர்மானமெடுக்கும் கூட்டங்களிலே பேசித் தீர்மானங்களை எடுத்த பின்னர் வெகுவிரைவில் ஒரு கட்டமைப்பாக முன்னேறுவது குறித்த நடவடிக்கையை எடுப்போம் என்றார். (ம-3,250,299)

## பரிந்...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் ஏற்கெனவே வெளியிட்டிருந்த அறிக்கை, இலங்கை அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் சீராக்கப்பட்டு முன்வைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் சில விடயங்களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமையால், இந்த அறிக்கையை இறுதிப்படுத்த மூன்று வாரங்கள் கால தாமதம் ஏற்பட்டது.

இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சில பொறிமுறைகளின் பல விடயங்களை அமுலாக்குவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே சிரியா, மியான்மார் மற்றும் வட கொரியா போன்ற நாடுகளில் அமுலாக்கப்பட்டுள்ளதைப் போன்றோ அல்லது இலங்கை விடயத்தை பிரத்தியேகமான முறையிலோ கையாள்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விடயத்துக்கான பொருத்தமான நடைமுறை எதுவென்பதை மனித உரிமைகள் பேரவையே தீர்மானிக்கும்.

அத்துடன், இலங்கை விடயத்தில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் பல ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்ட சான்றுகள் உள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடக்கு, கிழக்கு...

தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்கிய புதிய கூட்டணியை உருவாக்குவது குறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக தெரியவருகிறது.

இந்த கூட்டணியின் தலைவர் பதவி பெரும்பாலும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்த புதிய அரசியல் கூட்டணிக்கு இந்திய அரசாங்கத்தின் முழுமையான ஆதரவை பெற்றுக் கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக பேசப்படுகிறது.

மேற்படி புதிய அரசியல் கூட்டணியின் சின்னமான மலர் ஒன்றை பயன்படுத்துவது எனவும் அவர்கள் தீர்மானித்துள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. பெரும்பாலும் புதிய கூட்டணியின் சின்னமாக தாமரை மலர் இருக்கலாம் எனவும் தெரியவருகிறது. (ம-3)


மெகா பவர்
திகதி 26/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0776
வெற்றி எழுத்து S சுப்பர் இலக்க 02 வெற்றி இலக்கங்கள் 05 08 40 78

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/02/26 சீட்டிழுப்பு இலக்கம் 1578
சுப்பர் இலக்கம் 06 வெற்றி இலக்கங்கள் 09 39 52 55
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2021/02/26
சீட்டிழுப்பு இலக்கம் 4410
ஆங்கில எழுத்து G வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 0 5 0 1 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 26.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2705
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 09 34 46 62
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.02.26
சீட்டிழுப்பு இலக்கம் - 447
Y 21 46 78 79
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1206
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 26.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 112,039,155
வெற்றி இலக்கங்கள் 30 37 65 66 ஆங்கில எழுத்து D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3536
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 26.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,616,900
வெற்றி இலக்கங்கள் 11 40 42 52 ஆங்கில எழுத்து R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,136,751/=
வெற்றி இலக்கங்கள் 05 31 57 60 கும்பம்
திகதி : 26.02.2021
வெற்றி வாரம் : 3087
வர்ணம் : கடும் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,255,060

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1380 நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 26/02/2021 தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் D 11 14 23 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் 71,089,482/=

L 13 14 33 59
695 பச்சை 26.02.2021 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,105,445
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

நாகபூசணி அருளுடன்
மகிழ்ச்சி - அளவற்ற மகிழ்ச்சி
நம்பினால் நம்புங்கள்
யாழ். நகரில்
ஒரே நாளில் 2 வெற்றியாளர்கள்
500000 (ஐந்து லட்சம்)
ஒருவர் லட்சாதிபதியாக வென்றுள்ளார்
இவற்றை தேசிய லொத்தர் சபையின் NLB புதிய பரிசு சீட்டு, சம்பத் ராசி வரம் (Sampatha Lackna Warama) தனது முதலாவது குலுக்கலில் யாழ்.வெற்றி முகவர் கனகலிங்கம் திலகவதி மூலம் வழங்கியுள்ளது. தவிர அபிவிருத்தி லொத்தர் சபையின் DLB ராசி அதிர்ஷ்டம் (Lacknawasana) மூலம் லட்சாதிபதியை உருவாக்கியுள்ளனர். எனவே நாம் வெற்றியாளர்களை வாழ்த்துவதுடன் வெற்றியை தவறவிட்டவர்களை வரவேற்கின்றோம்.
இல.04.K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(அன்னை நாகா பூட்சிற்றி முன்பாக)
மற்றும் பஸ் நிலைய வைரவர் கோவில் பின்புறம்
யாழ். பிரதான முகவர் கனகலிங்கம் திலகவதி
(5940)

# சர்வதேசத்திடம் தீர்வைப்பெற முயற்சித்தால் மேலும் பிரிவினையே உருவாகும்

## நீதி அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

ஜெனிவா கூட்டத்தொடரின் அறிக்கையானது இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகவே முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் மக்களுக்கு நாட்டுக்குள் ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால் , அதற்கான தீர்வினை நாட்டில் தான் பெற்றுக் கொள்ளமுடியும். அதனைவிடுத்து சர்வதேச நாடுகளிடம்தீர்வைப்பெற்றுக்கொள்ள முயற்சித்தால் நாட்டு மக்கள் மத்தியில் மேலும் பிரிவினையே உருவாகும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது ,

ஜெனிவா கூட்டத்தொடரின் அறிக்கையானது ஒரு பக்கத்திற்கு சார்பாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவே நான் எண்ணுகின்றேன். இலங்கை இராணுவம் பயங்கரவாத அமைப்புக்கு எதிராகவே யுத்தம் செய்திருந்தது. இந்நிலையில் அதனை மறந்து இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தும் வகையிலேயே இந்த அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் மக்களாகிய நாம் எமக்கேதேனும் சிக்கல் நிலைமைகள் காணப்பட்டால், அதற்கான தீர்வினை நாட்டுக்குள்தான்பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து நாம் சர்வதேச நாடுகளிடம் தீர்வினை பெற்றுக் கொள்ள முயற்சித்தால் எம் மத்தியில் மேலும் இடைவெளியேற்படுவதை தவிர்க்க முடியாது என்றார். (ம-03)

# சடலங்களை அடக்கம் செய்யும் நடைமுறை

## அடுத்த வாரமே அமுலுக்கு வரும்

(கொழும்பு)

கோவிட் -19 நோயால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளித்து வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டபோதும் அதனை நடைமுறைப்படுத்துவது அடுத்த வாரம் வரை தாமதமாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கும் சுற்றறிக்கை இன்னும் வெளியிடவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட வழிகாட்டுதல்களை இறுதி செய்வதற்காக கொழும்பில் கலந்துரையாடலுக்காக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இன்று கூடுகின்றனர். (ம-03)

### இணை அனுசரணை நாடுகளுக்கு

# அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## சிவில் சமூக சம்மேளனம் கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளிடம்இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐசீசீ) பாரப்படுத்த அமெரிக்காவிடம் வடக்கு-கிழக்கு சிவில் சமூக சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் சம்மேளனம் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே.பிலிங்ரெனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐசீசீ) பாரப்படுத்த வேண்டியமையை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்குவதற்குவதற்கு ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, மொன்ரினேக்றோ மற்றும் வடமசிடோனியா அடங்கிய இணை அனுசரணை நாடுகளை இணங்கச்செய்வதற்குத் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு தங்களிடம் நாம் வலியுறுத்திக் கோருகிறோம் என்றுள்ளது. (ம-03)


**காணி விற்பனைக்கு**

செம்மணி வீதியில், நாயன்மார்கட்டு கேணியடியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.

(2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

விலை 5 இலட்சம் ரூபாய்

(5944)

077 288 0152, 077 623 4204

**PEARSON** INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Academic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 Scorers and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

**காணி விற்பனைக்கு**

யாழ். கோப்பாயில் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

(இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரத்தில் உள்ளது.

இருபாலை கிழக்கு C.C பாடசாலைக்கு அருகாமையில் 4 3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

( பிரித்துக் கொடுக்கப்படும்.)

பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

(தரகர் தேவையில்லை.)

(5941)

077 805 1655, 077 596 3845

**காணி விற்பனைக்கு**

ராச பாதையில் காணி விற்பனைக்கு. நேரில் வரவும்.

(5933)

076 254 6049

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org

(5444)

021 222 8093 புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திரு. ஸ்ரீசரவணபவன் தினேஷ்குமார்

ஆசிரியர் – யாழ் / பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

கல்வி டிப்ளோமா – யாழ். பல்கலைக்கழகம்

எமது பாடசாலையில் கற்பிக்கும் ஸ்ரீ சரவணபவன் தினேஷ்குமார் ஆசிரியர் அவர்கள் நேற்றுமுன்தினம் (25.02.2021) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றமையையிட்டு மனம் மகிழ்வதுடன் மேலும் பல உயர்வுகளைப் பெறுவதற்கு வாழ்த்துகின்றோம்.

(5937)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பண்டத்தரிப்பு.

**காணி தேவை**

கல்லுண்டாய் வீதியில் காக்கைதீவு மீன் சந்தைக்கும் அராலி பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் 1 ஏக்கர் அளவுடைய வெற்றுக்காணி உடனடியாகத் தேவை.

( தரகர் தேவையில்லை. )

(5932)

077 129 8201

GERMANY, SWISS செல்வோருக்கான A1, A2 Deutsche வகுப்புக்கள்

ILTS London (UK)
English, Sinhala
சிறியோர், பெரியோர்களுக்கான விசேட வகுப்புக்கள்

JV LANGUAGE CENTER
Parameswara Junction,
No. 140, Palaly Road, Jaffna.

(C-1532)

076 401 8564

அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500

(C-14476)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
- நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1511)

0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.